KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

மலர்:- 33, 16 January 2026 இதழ்:- 03

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரா:- நம்பிக்கையா? பழைய ஏமாற்றங்களின் மறு பதிப்பா?

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்கள் 15 ஜனவரி 2026 யாழ்ப்பாணம் சென் றார். பல்வேறு நிகழ்வு களில் கலந்து கொண்டார். வழமை போன்று மக்கள் திரளா கக் கூடினர். புகைப்படங்கள் எடுத்தனர். ஜனாதிபதி மக்களை வாரி அணைத்துக் கொண்டார். அந்தக் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவின. ஆனால் இந்தக் காட்சிகளுக்குப் பின்னால் எழும் அடிப்படை அரசியல் கேள்வி ஒன்று தவிர்க்க முடியாததாக உள்ளது. தமிழ் மக்கள் இன்னமும் சிங்களத் தலைவர்களை நம்புகின்றார்களா? அல்லது சிங்கள அரசியல் இன்னுமொரு முறை அவர்களை ஏமாற்றத் தயாராக உள்ளதா? (25ம் பக்கம் பார்க்க)



## ஹரிணி மீதான நம்பிக்கையீன பிரேரனையும் ஸ்ரீதரன் மீதான நடவடிக்கைக் கடிதமும்!





இலங்கை அரசியலில் இரு தரப்பிலும் வித்தியாசமான ஆட்டம் ஆரம்பமாகியுள்ளது. இரு தரப்பிலும் என்று குறிப்பிடுவது தெற்கிலும் தமிழர் தாயகத்திலும் என்பதாகும். ஆட்சித் தரப்பு ஆட்டம் பிரதமர் ஹரினி அமரசூரியவை மையப்படுத்தியது. இவரே கல்வி அமைச்சராகவும் இருப்பதால் புதிய கல்வித்திட்டம் ஒன்றை இவ்வருடம் அறிமுகம் செய்தார். இதில் என்ன மாற்றம் வந்துள்ளது என்று புரியாமலே, எதிர்க்கட்சிகள் என்றால் எதனையும் எதிர்க்க வேண்டுமென்ற பாணியில் எதிர்ப்புக் கிளம்பியது. (9ம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்பு அமைச்சின் தடைப்பட்டியலில் 16 அமைப்புக்கள் 206 தனிநபர்கள் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பாம்!

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# ஒரு தசாப்த காலத்தின் பின் சீனா செல்லும் கனடாப் பிரதமர்!



வர்த்தகப் போர் மற்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இணைப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக அமெரிக்காவுடன் கனடா நிச்சயமற்ற உறவுகளை எதிர்கொள்ளும் நேரத்தில் கனடாவின் பிரதமர் மார்க் கார்னி 14 ஜனவரி 2026 செவ்வாய்க்கிழமை சீனாவுக்குப் புறப்பட்டிருக்கிறார்.

அங்கு அவர் வர்த்தகம், சர்வதேச பாதுகாப்பு குறித்து பெய்ஜிங்கின் உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கனேடிய பிரதமர் ஒருவர் சீனாவுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை.

உலக அரசியல் இன்று பழைய கூட்டணிக் கோட்பாடுகளை உடைத்தெறிந்து, புதிய அதிகார மையங்களை நோக்கி நகர்கிறது. இந்த மாற்றமுள்ள சூழலில், கனடிய பிரதமர் மார்க் கார்னியின் சீனப் பயணம், ஒரு சாதாரண இருதரப்பு தூதரக நிகழ்வாகக் கருத முடியாத ஒன்று. மாறாக, அது கனடா எதிர்கொள்ளும் பொருளாதார அழுத்தங்களும், உலக அரசியல் யதார்த்தங்களும் திணித்த ஒரு நகர்வாகவே தெரிகிறது.

கடந்த ஒரு தசாப்தமாக கனடா சீனா உறவுகள் தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகின்றன. ஹவாவே விவகாரம், கனடிய குடிமக்களின் கைது, மனித உரிமைகள் தொடர்பான கடுமையான விமர்சனங்கள் ஆகியவை இரு நாடுகளுக்கிடையே ஆழமான நம்பிக்கையற்ற சூழலை உருவாக்கின. சீனாவை விமர்சிக்கும் மேற்கத்திய நாடுகளின் வரிசையில் கனடாவும் தெளிவாக நின்ற காலத்தில் இன்றைய இந்தப் பயணம் அரசியல் வட்டாரங்களில் பல கேள்விகளை எழுப்புவது இயல்பே.

எவ்வளவு அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும், பொருளாதார யதார்த்தத்தை கனடா புறக்கணிக்க முடியாது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியான சீனா, கனடாவின் விவசாய உற்பத்திகள், கனிம வளங்கள், எரிசக்தி மற்றும் கல்வித் துறைகளுக்கு இன்றும் முக்கிய சந்தையாகத் திகழ்கிறது. குறிப்பாக, அமெரிக்க சந்தையை மையமாகக் கொண்டு இயங்கும் கனடிய பொருளாதாரத்தின் பாதிப்புகளை அண்மைக்கால உலக நெருக்கடிகள் வெளிப்படையாக காட்டியுள்ளன.

இந்தப் பின்னணியில் மார்க் கார்னியின் சீனப் பயணம், கனடாவின் வர்த்தகத் திசையைப் பல்துறைப்படுத்தும் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. இது ஒரு விருப்ப அரசியல் அல்ல் மாறாக பொருளாதாரம் அரசியலை வழிநடத்தும் தருணமாகும்.

அமெரிக்கா சீனா மோதல் இன்று வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு என அனைத்துத் துறைகளையும் தாண்டி விரிந்துள்ளது. இவ்வாறான சூழலில் கனடா முழுமையாக வாஷிங்டனின் அரசியல் கோட்டிற்குள் மட்டுமே சிக்கிக் கொண்டிருந்தால் அதன் சுயநல அரசியல் வெளிநாட்டு கொள்கை கேள்விக்குறியாகும்.

மார்க் கார்னியின் சீனப் பயணம், அமெரிக்காவுக்கு எதிரான வெளிப்படைச் சவால் அல்ல. ஆனால், கனடா தனது தேசிய நலன்களைத் தானே வரையறுக்கும் என்ற மெல்லிய அரசியல் செய்தியை அது வெளிப்படுத்துகிறது. இதுவே இந்தப் பயணத்தின் முக்கிய அரசியல் சைகையாகும்.

இந்தப் பயணம் கனடாவின் உள்ளக அரசியலில் தீவிர விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகள், உய்குர் பிரச்சினை, ஜனநாயகச் சுதந்திரங்கள் குறித்து சீனாவுக்கு எதிராக நீண்ட காலமாகப் பேசிய கனடா, இப்போது வர்த்தக லாபங்களுக்காக அந்தக் குரலைத் தாழ்த்துகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் அரசியல் யதார்த்தம் ஒன்றை தெளிவாகக் காட்டுகிறது: தொடர்பு இல்லாத இடத்தில் அழுத்தமும் இல்லை. சீனாவுடன் உரையாடல் இல்லாமல், அதன் அரசியல் நடைமுறைகளில் எந்தச் செல்வாக்கையும் கனடா செலுத்த முடியாது என்பதே மார்க் கார்னி அரசாங்கத்தின் மறைமுக நிலைப்பாடு.

இன்றைய உலகம் ஒரே அதிகார மையத்தைச் சுற்றி இயங்குவதில்லை. பலதுருவ அரசியல் அமைப்பு உருவாகிக் கொண்டிருக்கும் நிலையில் சீனாவை முற்றாகப் புறக்கணிப்பது கனடா போன்ற நடுத்தர சக்தி நாடுகளுக்கு அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது.

அதனால்,மார்க் கார்னியின் சீனப் பயணம் ஒரு அரசியல் சூதாட்டமாக இருந்தாலும், அது தவிர்க்க முடியாத ஒன்றாகவே தோன்றுகிறது. மார்க் கார்னியின் சீனப் பயணம், கனடாவின் வெளிநாட்டு கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அறிகுறி. அது வர்த்தக லாபங்களுக்கான பயணமாக மட்டுமல்ல் உலக அதிகார மாற்றங்களுக்குள் கனடா தன் இடத்தை மீண்டும் தேடும் முயற்சியாகவும் விளங்குகிறது.

இந்த முயற்சி வெற்றியடையுமா என்பது கனடா வர்த்தக நலன்களுக்கும், ஜனநாயக மதிப்புகளுக்கும் இடையிலான சமநிலையை எவ்வாறு கையாள்கிறது என்பதிலேயே தீர்மானிக்கப்படும். அந்தச் சமநிலையை இழந்தால், இந்தப் பயணம் அரசியல் சாதனையாக அல்ல அரசியல் தற்காப்பு நடவடிக்கையாகவே வரலாற்றில் பதிவு செய்யப்படும்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# என் இனிய உறவுகளே! நன்றி! நன்றி!

முல்லைத்தீவு பிராந்தியத்தில் இயங்கி வரும் பாரதி இல்லம் மற்றும் கிளிநொச்சியில் இயங்கும் செஞ்சோலை இல்லம் அன்பு இல்லம் ஆகிய சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக முல்லைத்தீவு பாரதி இல்லம் பெரிதும் பாதிக் கப்பட்டது. ஆதரவற்ற குழந்தைகளின் பாதுகாப்பும் எதிர் காலமும் தங்கி இருக்கும் அந்த இல்லம், இயற்கை யின் கோர முகத்தால் சிதைவுற்ற போது மீண்டும் ஒரு முறை மனிதநேயத்தின் வலிமை உலகிற்கு வெளிப் பட்டது.

கனடாவில் இருந்து 33 ஆண்டுகளாக வெளி வரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கடந்த 14 ஆண்டு களாக மேற்குறிப்பிட்ட மூன்று இல்லத்தின் நலனில் கனடா தமிழ் சமூகத்தின் ஆதரவோடு தொடர்ச்சியான அக்கறையுடன் செயல்பட்டு வருவது நீங்கள் அறிந்ததே. செய்திகளை மட்டுமல்ல, தமிழ்ச் சமூகத்தின் துயரங்களை யும், பொறுப்புகளையும் தன் தலையாய கடமையாகக் கொண்டு செயல்படும் ஊடகமாக ஈழநாடு பத்திரிகை தன்னை நிரூபித்து வந்துள்ளது.

அந்த அடிப்படையில், புயலால் பாதிக்கப்பட்ட இல்லங் களின் தேவையை நிறைவேற்றும் நோக்கில் கடந்த மாதம் அவசர நிதி திரட்டல் ஒன்றை ஈழநாடு பத்திரிகை முன்னெடுத்தது. இந்த முயற்சிக்கு கனடா தமிழ் சமூகத் தினர் காட்டிய ஆதரவு உண்மையிலேயே மகிழ்ச்சி தரும் ஒன்றாக அமைந்தது. அரசியல் வேறுபாடுகளைக் கடந்து குழந்தைகளின் எதிர்காலம் என்ற ஒரே நோக்கில் ஒன்றி ணைந்து, சுமார் 26,64.000.00 இலட்சம் ரூபா நிதி திரட்டப்பட்டு இல்லங்களின் புனரமைப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டது. நிதி உதவி தங்களுக்குக் கிடைக்கப் பெற்றது என்பதையும் நிதியுதவி வழங்கிய கனடா தமிழ்சமூகத்திற்கு நன்றி தெரிவித்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட நன்றியறிதலையே கீழே காண்கிறீர்கள்.

அன்புடன் T.K.பரமேஸ்வரன் –ஆசிரியர் ஈழநாடு

பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையம்
**BHARATHY CHILD DEVELOPMENT CENTRE**
Reg No: NPC/30/02/03/02

08.01.2026

T.K.Parameswaran
Chief Editor
Eelanadu Newspaper
Eelanadu1993@gmail.com/
Tel: (416) 841-9600

வெள்ளப் பேரழிவு காரணமாக எமது பராமரிப்பில் இயங்கி வரும் மூன்று இல்லங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களைத் துடைக்கும் உயரிய மனிதாபிமான நோக்குடன் கனடா ஈழநாடு பத்திரிகை முன்னின்று கனடாவில் வாழும் ஈழத்தமிழ் சொந்தங்களிடம் உதவிக்கரம் நீட்டியமை எம்மை நெகிழச் செய்தது.

தாங்கள் அனைவரும் தங்களின் தனிப்பட்ட பொருளாதாரச் சிரமங்களையும் ஒதுக்கி வைத்து வழங்கிய இந்த உதவி, தாயகத்தில் வாழும் எங்கள் குழந்தைகள் யாருமற்ற அநாதைகள் அல்ல உலகெங்கும் அவர்களுக்காக துடிக்கும் உறவுகள் இருக்கின்றனர் என்ற ஆழ்ந்த நம்பிக்கையையும் புதிய உற்சாகத்தையும் எமக்குள் விதைத்துள்ளது.

இந்நிவாரண முயற்சியின் ஊடாக மொத்தமாக 12,025 கனடிய டொலர்கள், இலங்கைப் பண பெறுமதியில் ரூபா 26,64,000 ஆக இரண்டு கட்ட ங்களாக எமக்கு கிடைக்கப் பெற்றது. இந்தத் தொகை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இல்லக், குழந்தைகளின் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய பெரும் ஆதாரமாக அமைந்துள்ளது.

கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக, கனடா ஈழநாடு பத்திரிகை எமது இல்லங்களோடு கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக, கனடா ஈழநாடு பத்திரிகை எமது இல்லங்களோடு பின்னிப் பிணைந்து, கனடியத் தமிழ்சமூகத்தின் பேராதரவுடன் ஆற்றி வரும் தொடர்ச்சியான சேவை எமது வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயமாகும். அந்த அர்ப்பணிப்பையும், அன்பையும், பொறுப்புணர்வையும் எம்மால் என்றும் மறக்க முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கனடா ஈழநாடு பத்திரிகைக்கும், அதன் வாசகர்களுக்கும், நன்கொடையாளர்கள் அனைவருக்கும், பாரதி, செஞ்சோலை, அன்பு இல்லங்களின் சார்பாகவும், எமது குழந்தைகளின் சார்பாகவும் உளமார்ந்த நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பும் அருளும் நிறைந்த உங்கள் சேவை தொடர்ந்து பல உயிர்களுக்கு ஒளியாக அமைய வாழ்த்துகிறோம்.

நன்றியுடன்
பாரதி இல்லம்.

President
Bharathy Child Development Centre
4th Ward, Mulliyawalai,
Mullaitivu

Secretary
Bharathy Child Development Centre
4th Ward, Mulliyawalai,
Mullaitivu.

Address: Putharikuda, 4th Ward, Mulliyawalai, Mullaitivu, Sri Lanka.
T.P No : 0094 715354501
Email: bharathy.illam27@gmail.com
Website : www.bharathyillam.org
Bank : Bank of Ceylon, Mulliyavalai, Mullaitivu, Sri lanka.
SWIFT Code : BCEYLKLX
A/C No : 73265570
A/C Name : BHARATHY CHILD DEVELOPMENT CENTRE

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோத புத்தர் சிலையை வைத்த தேரர்கள் உட்பட 9 பேருக்கு விளக்கமறியல்!



திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியில் வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலையுடன் தொடர்புடைய நான்கு தேரர்கள் உள்ளிட்ட ஒன்பது பேரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் 14 ஜனவரி 2026 உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கானது 14 ஜகவரி 2026 புதன்கிழமை நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி குறித்த கட்டளையை பிறப்பித்திருந்தார். குறித்த வழக்கானது விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பினராலும் சமர்ப்பணங்கள் முன் வைக்கப்பட்டன.


இந்நிலையில் சமாதானமான முறையில் குறித்த வழக்கினை முடிவுக்குக் கொண்டு வர முடியும் எனவும் அவ்வாறாயின் சட்டவிரோத கட்டுமானங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளால் தெரிவிக்கப்பட்டபோது எதிர் தரப்பினர் அதற்கு இணங்கிக் கொள்ளாத நிலையில் குறித்த சட்டத்தின் கீழ் இடம் பெற்றிருக்கின்ற கைதுக்கு பிணை வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லை என தெரிவித்து குறித்த எதிரிகளுக்கு பிணை வழங்க நீதிபதி மறுப்பு தெரிவித்து எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்திருந்தார்.

குறித்த வழக்கில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டிருந்த 11 பேரில் 9 பேர் இன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக திருகோணமலை கல்யாண வன்ச திஸ்ஸ தேரர், பலாங்கொட கஞ்சப தேரர், திருகோணமலை சுவித வன்ச திஸ்ஸ தேரர், நந்த தேரர் ஆகிய 4 தேரர்கள் உட்பட சிவில் சமூகத்தினர் ஐவருமாக ஒன்பது பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிரதான கடற்கரைக்கு அருகில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் 2025 நவம்பர் மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் கடலோர பாதுகாப்பு கட்டளை சட்டத்தை மீறி சட்ட விரோதமான முறையில் புத்தர் சிலையை வைத்து மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தியதாக கடலோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 28 (01) மற்றும் 14 (01) போன்ற சட்ட விதிகளுக்கு அமைவாக திருகோணமலை துறைமுக பொலிஸார் குற்ற பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 17.11.2025 அன்று திருகோணமலை துறைமுக பொலிஸாரினால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கானது 26.11.2025 அன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிராளிகள் சார்பில் எவரும் முன்னிலையாகி இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பிரான்ஸில் இலங்கைத் தமிழர் செய்த செயலால் நீதிமன்றத்தால் ஒரு வருட சிறைத் தண்டனை!



பிரான்ஸில் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக மனைவி பிள்ளைகளை கொடூரமாக தாக்கிய இலங்கைத் தமிழருக்கு 12 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 5ஆம் திகதி நீதிமன்றத்தில் இலங்கை தமிழரான ஜோசப் கே என்ற நபர் தனது மனைவி மற்றும் மகளுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கடந்த வருடம் அதிக போதையில் இருந்த அவர், தனது மனைவியின் மூக்கை உடைத்த நிலையில் பாதிக்கப்பட்ட மனைவிக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் பிரான்ஸ் வந்த காலப் பகுதியில் இருந்து மனைவியை துன்புறுத்தி வந்ததாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான விசாரணையில் ஜோசப் கே.வின் மகள் தாயாருக்கு மொழி பெயர்ப்பாளராக செயல்பட்டு நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார்.

அதேவேளை ஜோசப் கேவின் வதிவிட அனுமதி காலவதியான நிலையில், அவர் எந்த நேரத்திலும் நாடு கடத்தப்படலாம் என அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக குடும்பத்தினருடன் அவர் இணைந்து இருப்பது, அவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்துத் தரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்த நீதிமன்றம், இலங்கை தமிழரான ஜோசப் கே.க்கு 12 மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.




# மேலதிகமாக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கிய அமெரிக்கா! அநுராவைச் சந்தித்து விடை பெற்றார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்!

டிட்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற் கொள்ளப்படவிருக்கும் மனிதாபிமான உதவிகளுக்காக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் மேலதிகமாக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. இதன் மூலம் மொத்தமாக 4 மில்லியன் டொலர் அமெரிக்க உதவியும் கிடைத்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக தனது இராஜதந்திர சேவையை நிறைவு செய்து விட்டு ஜனவரி 16ஆம் திகதி இன்று நாட்டிலிருந்து புறப்படவுள்ள ஜூலி சங் 12 ஜனவரி 2026 பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்தார்.

ஜூலி சங் தனது பதவிக்காலத்தில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளை ஜனாதிபதி இதன் போது பாராட்டினார்.

அத்துடன் டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்குவதற்காக அமெரிக்காவுடன் இணைந்து அவர் ஆற்றிய பங்களிப்பிற்கு ஜனாதிபதி தனது நன்றி



யைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளின் போது அவர் வழங்கிய விசேட ஆதரவிற்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டுத் தெரிவித்தார்.

2022 பெப்ரவரி மாதம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்ற ஜூலி சாங் அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75வது ஆண்டு நிறைவு உட்பட, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளின் பல முக்கிய மைல் கற்களில் தனது தலைமைத்துவத்தை வழங்கியிருந்தார்.

# மீண்டும் இணையும் இந்திய - அமெரிக்க உறவுகள்!



இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக பொறுப்பேற்ற செர்ஜியோ கோர், இந்தியாவை தவிர வேறு எந்த நாடும் எங்களுக்கு முக்கியமல்ல எனவும் பிரதமர் மோடியுடனான, அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் நட்பு உண்மையானது, எனவும் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

இந்திய பொருட்கள் மீது 50 சதவீத வரி விதிப்பதாக, அமெரிக்க ஜனதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த நாள் முதல் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திக்கொள்ள வேண்டும் என கூறி, அமெரிக்க ஜனாதிபதி பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுத்தார். இதனால், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க வரி விதிப்பால், இந்திய வர்த்தகர்கள் பாதிப்படைவதை தடுக்க, ஐரோப்பா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் பிரதமர் மோடி வர்த்தக ஒப்பந்தம் செய்து வருகிறார். மேலும், ஜனாதிபதி டிரம்புடன் பேசுவதை கூட பிரதமர் மோடி தவிர்த்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக உடன்பாடு குறித்த அடுத்தக் கட்ட பேச்சுவார்த்தை துவங்கவுள்ளது. இதையொட்டி, டில்லிக்கு சென்றிருந்த அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர், இரு நாடுகளுக்கு இடையே நிலவும் மனக்கசப்பு விரைவில் நீங்கும், என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை அழைப்பு வரும் பொழுது , அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அடுத்த ஆண்டோ, அல்லது அதற்கு அடுத்த ஆண்டோ நிச்சயம் இந்தியாவுக்கு வருகை தருவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# விஜய்க்கு ஆதரவு தெரிவித்த ராகுல்காந்தி!

விஜய்யின் ஜனநாயகன் படம் ஜனவரி 9ஆம் தேதி வெளிவரவிருந்த நிலையில், தணிக்கை சான்றிதழ் பிரச்சனை காரணமாக ரிலீஸ் தள்ளிப் போய் விட்டது. விஜய்யின் கடைசி படம் என்பதால் இப்படத்தை திரையரங்கில் கொண்டாட ரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். அப்படி காத்திருந்த ரசிகர்களுக்கு படம் வெளிவராதது பெரிய ஏமாற்றத்தை தந்தது. ஜனநாயகன் படத்திற்கு தணிக்கை சான்றிதழ் வழங்க வேண்டும் என படக்குழு நீதிமன்றத்தை நாடியது. சென்னை உயர் நீதிமன்றத்தில் தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட நிலையில், சென்சார் போர்ட் உடனடியாக அதனை மேல் முறையீடு செய்தது. இதனால் மீண்டும் பிரச்சனை தொடங்கியது.

அரசியல் ரீதியான சில காரணங்களால் தான் ஜனநாயகன் படத்தை ரிலீஸ் செய்யவிடாமல் தடுக்கிறார்கள் என விஜய் ரசிகர்கள் கூறி வருகிறார்கள். படத்தின் ரிலீஸ் தள்ளிப்போன நிலையில், திரையுலகை சேர்ந்த அஜய் ஞானமுத்து, சிலம்பரசன், ஜீவா, ஜெய், சாந்தனு, சிபிராஜ் என பலரும் தங்களது ஆதரவை விஜய்க்கு தெரிவித்து வந்தனர்.

பல அரசியல் தலைவர்களும் தங்களது ஆதரவை தெரிவித்து வந்த நிலையில், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி ஆதரவளித்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த பதிவில், 'ஜனநாயகன் படத்தை தடுக்கும் முயற்சி தமிழ் கலாச்சாரம் மீதான தாக்குதல். திரு மோடி அவர்களே, தமிழ் மக்களின் குரலை அடக்குவதில் உங்களால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது' என கூறி ஜனநாயகன் படத்திற்கும் விஜய்க்கும் தனது ஆதரவை தெரிவித்து இருக்கிறார்.

இது இவ்வாறிருக்க விஜய் சிபிஐ விசாரணை முடித்து, சென்னை புறப்பட்டுள்ள நிலையில்,



மீண்டும் சம்மன் அனுப்பப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கரூரில் கடந்த செப்டம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற தவெக தலைவர் விஜய்யின் தேர்தல் பிரச்சாரத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கை சிபிஐ விசாரித்து வரும் நிலையில், தவெக தலைவர் விஜய் விசாரணைக்காக நேரில் ஆஜராக சிபிஐ அவருக்கு சம்மன் அனுப்பியது.

இதன்படி தனி விமானம் மூலம் டெல்லி சென்ற விஜய், சிபிஐ அலுவலகத்தில் ஆஜரானார் அவரிடம் சுமார் 6 மணி நேரம் விசாரணை நடைபெற்றது. இதில், கரூர் மக்கள் சந்திப்பிற்கு தாமதமாக வந்தது ஏன்?, சம்பவம் நடந்த உடன் அந்த இடத்தை விட்டு வெளியேறியது ஏன்? என பல் வேறு கேள்விகள் கேட்கப்பட்டதாக கூறப்படுகிறது.

வாய்மொழியாக மட்டுமல்லாது எழுத்து பூர்வமாகவும் விஜய்யிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மீண்டும் வரும் ஜனவரி 19ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## மனனம் அல்ல சிந்தனையே தேவை!

இலங்கையில் மாணவர்கள் மனனம் செய்து ஒப்புவிப்பதற்குப் பதிலாக புரிந்து கொண்டு சிந்தித்து கற்றுக் கொள்ளும் கல்வித் திட்டம் ஒன்று அறிமுகமாகும் போதெல்லாம், அதற்கு எதிராக சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த மத குருமாரும் ஒரே குரலில் எதிர்ப்புத் தெரிவிப்பது தற்செயலான நிகழ்வல்ல. அது இலங்கை அரசியல் சமூக கட்டமைப்பின் ஆழத்தில் ஊறியுள்ள அதிகாரப் பயத்தின் வெளிப்பாடு.

புதிய கல்வி முறை என்றால் அது பாடப்புத்தக மாற்றம் மட்டுமல்ல. அது மாணவர்களின் சிந்தனைச் சுதந்திரத்தை உருவாக்கும் ஒரு சமூக மாற்றத்தின் விதை. மனனம் மையமான கல்வி, கேள்வி கேட்காத தலைமுறையை உருவாக்குகிறது. கேள்வி கேட்காத சமூகம் அதிகாரத்திற்கு அச்சமில்லை. ஆனால் புரிந்து கொண்டு சிந்திக்கும் மாணவர்கள் உருவானால் அவர்கள் நாளைய வாக்காளர்களாகவும், விமர்சகர்களாகவும், மாற்றத்தைத் தேடும் குடிமக்களாகவும் மாறுவார்கள். இதுவே அதிகார அரசியலுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. மனனம் அதிகாரத்தின் எளிய கருவி

இலங்கையில் நீண்ட காலமாக கல்வி ஒரு கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. வரலாறு, மதம், தேசம், போர் ஆகியவை ஒரே கோணத்தில் மனனம் செய்யப்படுகின்றன. மாணவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர கேள்வி எழுப்பக் கூடாது.

இந்த அமைப்பில் வளர்ந்த மாணவர்: அரசின் செயல்களை விமர்சிக்க மாட்டார். இனவாத அரசியலை கேள்விக்குள் கொண்டு வர மாட்டார் மதத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்துவதை சிந்திக்க மாட்டார். இது தான் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் கடும்போக்குப் பௌத்த மதகுருமார்களுக்கும் வசதியான நிலை.

புதிய கல்வி முறையால் யாருக்கு அச்சம் ஏற்படும் என்றால் மனனம் இல்லாத புரிதல் மையமான கல்வி வந்தால் மாணவர்கள் கேள்வி எழுப்பத் தொடங்குவார்கள்:

இந்த வரலாறு யாரின் பார்வையில் எழுதப்பட்டது? போர் உண்மையில் யாருக்காக? பௌத்தம் அமைதியின் மதமென்றால் ஏன் வன்முறை நியாயப்படுத்தப்படுகிறது? சிறுபான்மையினருக்கு நடந்த அநீதிகள் எங்கே மறைக்கப்பட்டன?

இந்தக் கேள்விகள் எழுந்தால், அரசியல்வாதிகளின் தேசியவாத முகமூடி சிதறும். மதகுருமார்களின் அரசியல் செல்வாக்கு குறையும். அதனால் தான் கல்வி மாற்றமே அவர்களுக்குப் பேரச்சமாக மாறுகிறது.

பௌத்தமதம் இலங்கையில் ஆன்மீகப் பாதையை விட அரசியல் அடையாளமாக மாற்றப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த உண்மை. அந்த அரசியல் பௌத்தத்திற்குத் தேவையானது பகுத்தறிவற்ற, கட்டுப்பட்ட கேள்வி கேட்காத தலைமுறை. புதிய கல்வி முறை அந்த அடிப்படையையே குலைக்கிறது.

அதனால் தான் தேசிய பண்பாடு அழிகிறது மேற்கத்திய சதி பௌத்த அடையாளத்திற்கு ஆபத்து போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டு கல்வி மாற்றம் எதிர்க்கப்படுகிறது. உண்மையில் அழியப் போகுவது பண்பாடு அல்ல. அதிகாரமும், மதவெறியும் தான்.

உலகின் எந்த நாட்டிலும் மனனம் மையமான கல்வியிலிருந்து சிந்தனை மையமான கல்விக்குச் சென்றபோது, சமூக விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. இலங்கையிலும் அதே மாற்றம் நிகழ்ந்தால் இனவாத அரசியல் பலவீனப்படும் மதத்தின் அரசியல் பயன்பாடு கேள்விக்குள்ளாகும் சிறுபான்மையரின் குரல் வலுப்படும் ஜனநாயகம் உண்மையில் செயல்படத் தொடங்கும் இதையே அதிகார மையங்கள் விரும்புவதில்லை.

மனனம் செய்யாமல் மாணவர்கள் படிக்கும் கல்வித் திட்டத்தை சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த மதகுருமார்களும் எதிர்ப்பதன் காரணம் கல்வி மீதான அக்கறை அல்ல. அது அதிகாரம் கையிலிருந்து நழுவும் என்ற அச்சம். சிந்திக்கும் மாணவன் உருவானால் அடக்குமுறை அரசியல் நீடிக்காது. அதனால் தான் இலங்கையில் கல்வி மாற்றமே ஒரு அரசியல் போர்க்களமாக மாறியுள்ளது. - ஆசிரியர்

# கைதும் நன்றியும்:- டக்ளஸ் தேவானந்தா விவகாரத்தின் அரசியல் பின்னணி என்ன?



முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து பிணையில் வெளிவந்ததும் கடந்த வாரத்தில் தமிழ் அரசியலில் பெரும் பேசு பொருளாக மாறியது. குறிப்பாக பிணையில் வெளிவந்த பின்னர் அவர் ஜனாதிபதி அநுரவுக்கு நன்றி தெரிவித்ததாக வெளி வந்த செய்திகள், வடக்குகிழக்கு தமிழர்களிடமும் புலம் பெயர்ந்த தமிழர்களிடமும் குழப்பத்தையும் சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளன.

கைது செய்யப்பட்ட ஒருவர் அதே ஆட்சித் தலைமைக்கு நன்றி சொல்வது ஏன்? இந்தக் கேள்வி சாதாரணமானதல்ல. இதன் பின்னால் அரசியல் கணக்குகளும் அதிகாரச் சமநிலைகளும் இருக்கின்றன.

முதலில் டக்ளஸ் தேவானந்தா கைது தமிழர்களின் பார்வையில் ஒரு நீதிச் செயல் போல தோன்றியது. நீண்ட காலமாக அரசின் பாதுகாப்பு வலையினுள் இருந்து செயல்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது, புதிய அரசியல் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால் அந்த நம்பிக்கை நீடிக்கவில்லை. பிணை வழங்கப்பட்ட வேகம், அதன் பின்னர் வெளிப்பட்ட நன்றிக் கூறல் இவை அனைத்தும் அந்த கைது உண்மையில் எவ்வளவு தூரம் சுயாதீனமானது என்ற கேள்வியை எழுப்புகின்றன.

டக்ளஸ் தேவானந்தாவின் நன்றிக் கூறலை, தனிப்பட்ட பணிவாக மட்டும் பார்க்க முடியாது. இலங்கையின் அரசியல் மரபில் இத்தகைய நன்றிக் குறிப்புகள் பெரும்பாலும் அரசியல் செய்தி ஒன்றைச் சுமந்தே வெளிவரும். அது ஜனாதிபதிக்கான விசுவாசத்தின் மறுஉறுதியாகவும், அரசியல் பாதுகாப்பு வலையிலிருந்து தன்னை முற்றிலும் துண்டிக்கவில்லை என்பதற்கான சைகையாகவும் புரிந்து கொள்ளப்படலாம்.

இதன் பின்னணியில் இரண்டு முக்கிய அரசியல் யுக்திகள் பேசப்படுகின்றன.

முதல் அநுர அரசாங்கத்தின் யுக்தி. டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்தது, தமிழ் மக்களிடையே ஒரு தற்காலிக நம்பிக்கையை உருவாக்கும் நடவடிக்கையாக இருந்திருக்கலாம். அதே நேரத்தில், அவரை முற்றிலும் அரசியல் விளிம்புக்கு தள்ளாமல், பிணை வழியாக மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது, வடக்கில் உள்ள பழைய அரசியல் வலையமைப்புகளை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

இரண்டாவது டக்ளஸ் தேவானந்தாவின் தனிப்பட்ட அரசியல் தந்திரம். பல அரசாங்கங்களைத் தாண்டி உயிர் வாழ்ந்த அரசியல்வாதியாக அவர் அறியப்படுகிறார். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எதிராக நேரடியாக மோதாமல், அவர்களுடன் சமநிலை அரசியல் நடத்துவதே அவரது நீண்டகால யுக்தி. அந்த வகையில், ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தது, நான் இன்னும் அமைப்பின் ஒரு பகுதியே என்பதைக் காட்டும் ஒரு குறியீடாகவும் இருக்கலாம்.

இங்கே கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சம் இந்த நிகழ்வுகள் நடக்கும் அதே காலப்பகுதியில், சில புலம்பெயர்ந்த தமிழர்கள் தடை செய்யப்பட்ட பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை. ஒரு புறம் தமிழ் மக்களிடம் எதிர்ப்பை சந்தித்த அரசியல்வாதி கைது செய்யப்பட்டு, மறுபுறம் தமிழ் அரசியல் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இது தற்செயலான இணைப்பா, அல்லது திட்டமிட்ட அரசியல் சமநிலையா என்ற கேள்வி எழுவது இயல்பே.

இதன் மொத்தப் படிமம் என்ன சொல்கிறது என்றால், டக்ளஸ் தேவானந்தா கைது என்பது முழுமையான நீதிச் செயல் அல்லஇ அது அரசியல் கணக்குகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருக்க வாய்ப்பு அதிகம். அதேபோல், அவரது நன்றிக் கூறல், தனிப்பட்ட உணர்ச்சியின் வெளிப்பாடு அல்ல. அது அரசியல் பாதுகாப்புக்கான ஒரு அறிவிப்பு.

இதனால் தான் தமிழ் மக்கள் குழம்புகின்றார்கள். ஏனெனில், அவர்கள் எதிர்பார்த்தது நீதியின் உறுதி. ஆனால் அவர்கள் காண்பது, பழைய அரசியல் நாடகத்தின் இன்னொரு காட்சி. கைது, பிணை, நன்றி இந்த மூன்றும் சேர்ந்து ஒரு விஷயத்தை மட்டுமே நினைவு ஊட்டுகின்றன:

இலங்கையில் ஆட்சி மாறினாலும், அதிகார அரசியலின் அடிப்படை விதிகள் இன்னும் மாறவில்லை.

தமிழ் மக்கள் இனி உணர வேண்டியது இது தான். ஒருவரின் கைது அல்லது விடுதலை மட்டுமே அரசியல் மாற்றத்தின் அளவுகோல் அல்ல. அந்த நடவடிக்கைகள் யாருக்கு எதிராகவும், யாருக்குச் சாதகமாகவும், எந்த அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன என்பதே உண்மையான அளவுகோல்.

டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தது, ஒரு மனிதனின் சொல் அல்ல. அது இலங்கையின் மாறாத அரசியல் அமைப்பின் ஒரு குறிப்பு. அந்த அமைப்பு மாற்றப்படும் வரை இப்படியான குழப்பங்கள் தொடர்ந்தே இருக்கும்.

## பாதுகாப்புத் தரப்பினரின் சொல்லுக்கு அடி பணிந்தது அநுர அரசு! பயங்கரவாதப் புதிய சட்ட வரைவு குறித்து சுமந்திரன் சாடல்!



2023இல் அப்போதைய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடிய தேசிய மக்கள் சக்தி இப்போது பாதுகாப்புத்தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அதனையொத்த சட்ட வரைவையே பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு எனும் பெயரில் வெளியிட்டிருப்பதாக இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் அரசாங்கத்தினால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் வரைவில் முன்னைய திருத்தச் சட்டமூலங்களை விடவும் மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதை விடுத்து, அதனைப் பதிலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முற்றாக எதிர்ப்பதாகவும் சுமந்திரன் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் புதிய சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும், அதற்கமைய இவ்வரைவின் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை கடந்த 2023 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் உள்ளடக்கங்களையே ஒத்திருப்பதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அவ்வேளையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தேசியமக்கள் சக்தியின் சார்பில் இப்போது வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகிக்கும் விஜித்த ஹேரத் உயர்நீதிமன்றத்தை நாடினார். ஆனால் இப்போது அதன் உள்ளடக்கத்திலிருந்து பெருமளவுக்கு மாறுபடாத புதிய வரைவை அரசாங்கம் முன்மொழிந்திருக்கிறது என அவர் கரிசனை வெளியிட்டார்.

அது மாத்திரமன்றி இப்புதிய வரைவைத் தயாரித்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்த பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள், பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு இப்புதிய வரைவு கூடப் போதுமானதல்ல என முரண்பட்டதாக அறியக் கிடைத்ததாகச் சுட்டிக் காட்டிய சுமந்திரன், எனவே எதிர்க்கட்சியாக இருந்தபோது முன்னிறுத்திய தமது கொள்கையைப் புறந் தள்ளிட்டு, இப்போது அரசாங்கம் பாதுகாப்புத் தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இவ்வரைவை வெளியிட்டிருப்பதாக விசனம் வெளியிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் புதிய வரைவின் உள்ளடக்கம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்ததன் பின்னர், வெகுவிரைவில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நீதியமைச்சுக்குக் கடிதம் அனுப்பி வைப்போம் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமானால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும். இந்த சட்டவரைவை நீக்க கோரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த வேண்டும் என்று முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரிடம் வலியுறுத்தினார். நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டிலும் பாரதூரமானது. பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்ட மானால் நாட்டில் ஜனநாயகம் இல்லா தொழியும், ஊடக சுதந்திரம் அரச அடக்குமுறைக்கு உள்ளாகும். இந்த சட்டவரைவை நீக்குமாறு மாநாயக்க தேரர்கள் அறிவுறுத்த வேண்டும் என்றார்.

# என் இனிய வாசகர்களே! கலாரசிகப் பெருமக்களே!




என் இனிய வாசகர்களே! கலாரசிகப் பெருமக்களே!

கனடாவில் இருந்து தொடர்ச்சியாக 32 ஆண்டுகளாக வெளி வந்து, இவ்வாண்டு ஜனவரி முதல் 33ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்த எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது.

புலம்பெயர் வாழ்வின் பரபரப்புக்கிடையிலும் தாயகத்தின் குரலைத் தன் பக்கங்களில் தாங்கி தமிழ்த் தேசியம், தமிழீழவிடுதலை தாயகம் ஆகிய உயர்ந்த எண்ணங்களை இணைத்துப் பயணிக்கும் ஈழநாடு பத்திரிகை தமிழ் சமூகத்தின் சிந்தனையின் வெளிப்பாடாகத் திகழும் ஒரு ஊடகம் என்பது யதார்த்தமான உண்மையாகும்..

இந்த வரலாற்று நிகழ்வை மேலும் அர்த்தமிக்கதாக நிகழ்வாக மாற்றி எம்மண்ணில் நலிவுற்றோர் நலன் பேணும் நோக்கில் தமிழகத்தின் புகழ்பெற்ற திரைப் படப் பின்னணிப் பாடகரும் கர்நாடக இசைக் கலைஞருமான சத்தியப் பிரகாஷ் அவர்கள் வழங்கும் ஏழிசைக் கீதங்கள் இசைக்கச்சேரி இசை ரசிகர்களுக்கு ஒரு மனம் நிறைந்த நிகழ்வாக அமையவுள்ளது. தாயக மணம் ததும்பும் அவரது குரல் காலத்தைக் கடந்து நிற்கும் இசை மரபை புதிய உணர்வுகளோடு இணைக்கும் ஒரு இசைப் பயணமாக இந்தக் கச்சேரி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் ஈழத்தின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவரான தமிழருவி சிவகுமாரன் அவர்கள் தாயகத்தின் வேர்களும் புலம்பெயர் தேசத்தின் விழுதுகளும் என்ற தலைப்பில் ஆற்றவுள்ள சிறப்புச் சொற்பொழிவு, தாயகத்தின் வாழ்வியல் நினைவுகளையும் புலம்பெயர் வாழ்வின் அடையாளம், நினைவு, பொறுப்பு ஆகியவற்றை ஆழமாகத் தொடும் சிந்தனை வெளிச்சமாக அமையவுள்ளது.

இசையோடு சிந்தனையும் சங்கமிக்கும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா, ஒரு கொண்டாட்டமாக மட்டுமல்ல. ஒரு சமூகப் பயணத்தின் அர்த்தமுள்ள அடையாளமாகவும் மாறவிருக்கிறது. அனைவரும் தவறாது கலந்து கொண்டு இந்த சிறப்புமிக்க நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். உங்கள் வரவு ஈழநாடு பத்திரிகை கடந்து வந்த பாதையின் சுவடாக அமையட்டும். உங்கள் வரவையும் வாழ்த்துக்களையும் 416 841 9600 என்ற தொலைபேசியில் அல்லது eelanadu1993 @gmail.com என்ற இல் Email கிர்ந்து கொள்ளுங்கள். நன்றி

# பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழரசுக்கட்சி ஆதரவு இல்லை

பிரதமர் ஹரிணி அமரசூ ரியவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவளிக்காது என அதன் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது, பிரதமர் பதவியில் இருந்தும், கல்வி அமைச்சர் பதவியில் இருந்தும் ஹரிணி அமரசூரியவை பதவி நீக்கம் செய்வதற்காக எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதுடன் அதற்கான கையெழுத்தையும் சேகரித்து வருகின்றனர். எனினும் அந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் இலங்கை தமிழரசுக் கட்சி கையெழுத்திடாது.

ஹரிணி அமரசூரிய பெண் பிரதமர் என்ற அடிப்படையிலும், அவருக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சரியான ஆதாரங்களை எவரும் வௌியிடாமை ஆகிய காரணங்களுக்காக அந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் எமது கட்சியினர் கையெழுத்திடவில்லை.

சர்ச்சைக்குரிய அந்த கற்றல் தொகுதி நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்காக அவரை பதவி நீங்கக் கோருவதை ஒரு அரசியல் ரீதியான பழி வாங்கலாகவே தமது கட்சி கருதுகிறது

இது தொடர்பில் பாராளுமன்ற குழுக்கூட்டத்திலும் கட்சியின் தலைமையுடன் கலந்துரையாடியுள்ளோம். எனவே அந்த நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றில் முன் வைக்கப்பட்டாலும் அந்த பிரேரணைக்கு ஆதரவாகவும், பிரதமருக்கு



எதிராகவும் எமது கட்சி வாக்களிக்காது நாட்டிற்கு புதிய கல்வி சீர்த்திருத்தம் ஒன்று அவசியமானதாகும். உலக நாடுகளில் ஆரம்ப கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் இலங்கையில் இல்லை. இலங்கையில் ஆரம்பக் கல்வி பின்னடைவாகவே உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை கையாளுவதில் அரசாங்கத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் உள்ளன. எனினும் தனிப்பட்ட ரீதியில் பெண் ஒருவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அவதூறுகளில் நாம் பங்காளிகளாக மாற முடியாது என மேலும் தெரிவித்துள்ளார்.

# இக்பால் அத்தாஸ்:- ஒரு காலத்தின் சாட்சி!



இலங்கையின் இராணுவம், பாதுகாப்பு, அரசியல் ஆகிய துறைகளில் நீண்ட காலமாக ஆழமான ஆய்வுகளுடன் எழுதி வந்த மூத்த பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் அவர்களின் மறைவு, இலங்கை ஊடக உலகிற்கு மட்டுமல்ல் உண்மைத் தகவல்களைத் தேடி வாசித்த அனைத்து வாசகர்களுக்கும் பெரும் இழப்பாக அமைந்துள்ளது.

பத்திரிகைத் துறையில் பல தசாப்தங்களாகச் செயல்பட்ட இக்பால் அத்தாஸ், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இராணுவ விவகாரங்களைப் பொறுப்புடன் பதிவு செய்த முக்கிய எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கினார். குறிப்பாக Sunday Times உள்ளிட்ட முன்னணி ஆங்கில ஊடகங்களில் அவர் எழுதிய பாதுகாப்பு மற்றும் இராணுவ அரசியல் கட்டுரைகள், அதிகார மையங்களின் உள்நிலைத் தீர்மானங்களை வெளிச்சமிட்டு காட்டிய முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன.

இலங்கையின் உள்நாட்டு யுத்த கால கட்டம், அதனைத் தொடர்ந்து உருவான அரசியல் இராணுவ மாற்றங்கள், பாதுகாப்பு அமைச்சின் செயல்பாடுகள், ஆயுத கொள்முதல், சர்வதேச உறவுகள், உளவுத் துறை நடவடிக்கைகள் போன்ற பல சிக்கலான விடயங்களை அவர் எழுதிய விதம், உணர்ச்சியோ அல்லது அரசியல் சார்போ இல்லாமல் தகவல் ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதுவே அவரது எழுத்துகளுக்கு தனித்துவமான நம்பகத்தன்மையை வழங்கியது.

இக்பால் அத்தாஸ் அவர்கள், அதிகாரத்தை அணுகும் வாய்ப்பைப் பெற்றிருந்த போதும், அந்த அணுகலைப் பயன்படுத்தி புகழ்ச்சி எழுதாத பத்திரிகையாளராகவே அறியப்பட்டார். அரசாங்கம், இராணுவம், பாதுகாப்புத் துறை என எவராக இருந்தாலும், பொதுநலனுக்குப் பாதகமான விடயங்களை நிதானமான மொழியில், ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதில் அவர் உறுதியுடன் இருந்தார். இதன் காரணமாக அவர் எழுத்துகள் அரசியல் மாற்றங்களைக் கடந்தும் மதிப்பைப் பெற்றன.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் இராணுவ அரசியல் சார்ந்த பல முக்கிய கட்டுரைகளை பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவர் எழுதியுள்ளார். ஒரு சில பாதுகாப்புக் காரணங்களால் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் அரசியல் முடிவுகளின் பின்னணி சர்வதேச அழுத்தங்கள் போன்ற விடயங்களை தமிழ் வாசக உலகிற்கு தெளிவாக ஈழநாடு பத்திரிகை எடுத்துச் சென்றதில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

ஒரு செய்தியாளராக மட்டுமல்ல, வரலாற்றை பதிவு செய்த ஆய்வாளராகவும் இக்பால் அத்தாஸ் நினைவுகூரப்பட வேண்டியவர். எதிர்காலத்தில் இலங்கையின் யுத்த காலத்தையும் பாதுகாப்பு அரசியலையும் ஆய்வு செய்யும் எவருக்கும், அவரது எழுத்துகள் தவிர்க்க முடியாத ஆதாரங்களாக இருக்கும். இக்பால்அத்தாஸ் அவர்களின் மறைவு, இலங்கையின் இராணுவ அரசியல் பத்திரிகைத் துறையில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது. உண்மையைத் தேடும் பத்திரிகை மரபுக்கும், பொறுப்புணர்வுடன் எழுதும் செய்தி யாளர்களுக்கும் அவர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், சக ஊடகவியலாளர்களுக்கும், வாசகர்களுக்கும் ஈழநாடு பத்திரிகை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அவர் விட்டுச் சென்ற எழுத்துப் பதிவுகளும் பத்திரிகை நெறியும், காலம் கடந்தும் நினைவு கூரப்படும்.

# இலங்கையின் புதிய அரசியலமைப்பு தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் அபாயம்! பிரதமருக்கு தமிழக முதல்வர் அவசரக் கடிதம்!



இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், அங்கு வாழும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைந்திருப்பதாகக் கவலை தெரிவித்து தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் இது ஒரு முக்கிய திருப்பமாகப் பார்க்கப் படுகிறது.

தமிழக முதல்வர் தனது கடிதத்தில், இலங்கை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளைத் துரிதப்படுத்தியுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், உத்தேச அரசியலமைப்பு வரைபு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி (Unitary State - 'ஏக்கியராஜ்ய') முறையை வலுப்படுத்துவதாகவும், இது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முற்றிலுமாகப் புறக்கணிப்பதாகவும் முதல்வர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் உத்தேச புதிய அரசியலமைப்பானது, அதிகாரப் பகிர்வை உறுதி செய்யும் 13வது திருத்தச் சட்டத்தையும் நீர்த்துப் போகச் செய்யும் அபாயம் உள்ளது. இது தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தும் நிலைக்குத் தள்ளும். எனவே, இந்தியா உடனடியாக இராஜதந்திர ரீதியில் தலையிட்டு, தமிழர்களின் உரிமைகளை உறுதி செய்ய வேண்டும், என்று மு.க. ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், 1985ம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட 'திம்பு கோட்பாடுகள்' (Thimphu Principles) அடிப்படையில் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக அங்கீகரித்தல், தமிழர்களை ஒரு தனித் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி முறையிலான தீர்வையே இந்தியா வலியுறுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நலன் காப்பதில் இந்தியாவுக்கு தார்மீகப் பொறுப்பு இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள தமிழக முதல்வர், வெறும் பொருளாதார உதவிகளோடு நின்றுவிடாமல், இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுவதை உறுதி செய்யப் பிரதமர் மோடி அவர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும் எனவும் இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசியலமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப்போகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஒரு நியாயமான நீடித்த தீர்வுக்கு அது பங்களிக்கும் என தான் நம்புவதாகவும் எழுதியுள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஹரிணி மீதான நம்பிக்கையீன பிரேரணையும் ஸ்ரீதரன் மீதான நடவடிக்கைக் கடிதமும்!

இலங்கை அரசியலில், இரு தரப்பிலும் வித்தியாசமான ஆட்டம் ஆரம்பமாகியுள்ளது. இரு தரப்பிலும் என்று குறிப்பிடுவது தெற்கிலும் தமிழர் தாயகத்திலும் என்பதாகும்.

ஆட்சித் தரப்பு ஆட்டம் பிரதமர் ஹரினி அமரசூரியவை மையப்படுத்தியது. இவரே கல்வி அமைச்சராகவும் இருப்பதால் புதிய கல்வித்திட்டம் ஒன்றை இவ்வருடம் அறிமுகம் செய்தார். இதில் என்ன மாற்றம் வந்துள்ளது என்று புரியாமலே, எதிர்க்கட்சிகள் என்றால் எதனையும் எதிர்க்க வேண்டுமென்ற பாணியில் எதிர்ப்புக் கிளம்பியது.

ஆறாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் விசமிகள் சிலர் புகுத்திய வேண்டப்படாத இடைச்செருகல் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. ஹரினிக்கும் ஜே.வி.பி. தலைமைக்கும் இடையில் ஏற்கனவே பிச்சல் பிடுங்கல் என்றும் அவரை பதவி நீக்க ஜே.வி.பி. செயலர் ரில்வின் சில்வா முயற்சிப்பதாகவும் ஊடகங்கள் தெரிவித்து வந்தன. இதனை சஜித், நாமல் தலைமையிலான கட்சிகள் நாடாளுமன்றத்திலும் சொல்லி வந்தன. ஹரினியைப் பதம் பார்த்தால் அநுர அரசுக்குள் வெடிப்பை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

அநுர அரசின் அமைச்சரவையில் ஹரினி மட்டும் ஜே.வி.பி. உறுப்பினர் அல்லாதவர். இவரது பிரதமர் பதவியில் அமைச்சர் பிமல் ரத்னநாயக்க கண் வைத்திருப்பதாகவும் பரபரப்பான செய்திகள் வந்தன. இந்தச் சூழ்நிலையில் பாடப்புத்தக விவகாரத்தை பெரிதாக்கி அரசை ஆட்டிப் பார்க்கலாம் என்ற முனைப்பில் எதிர்க்கட்சிகள் இணைந்து அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதில் ஒப்பமிட்டது பரபரப்பான செய்தியானது. அநுர அரசின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற போதுமானதல்ல. இது எதிர்க்கட்சிகளுக்கு தெரியாததுமல்ல.



எனினும் அரசுக்கெதிராக சுமத்த வேண்டிய அனைத்து குற்றங்களையும் ஒரேயடியாக நாடாளுமன்றில் கூறி அதனை அதிகார ஏட்டிலும், பொது ஊடகங்களிலும் பிரசித்தப்படுத்தினால் போதுமென்ற கோதாவிலேயே பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் இந்த முன்னெடுப்புக்கு இவ்விடயத்தில் துள்ளிக்கொண்டிருக்கும் நாமலின் தந்தையான மகிந்த ராஜபக்ச ஆதரவில்லை. இதனை அவரே வெளிப்படுத்தியுள்ளார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதமர் ஹரினி மீதான அநாவசியத் தாக்குதல்களை கண்டித்துள்ளார். நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றாலும் ஜே.வி.பி.யினரின் நிலைப்





பாட்டை அறியவாவது இது உதவுமென சஜித் தரப்பு நம்புகிறது.

ஹரினி ஒரு பெண் என்பதால் தான் தாக்கப்படுகிறார் என சில குரல்கள் எழும்புகின்றன. சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரான போதும், அவரது சிவில் உரிமைகளை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு ரத்துச் செய்த போதும் இதே கோசங்கள் எழும்பியதுண்டு.

ஆனால், ஹரினி இவற்றை எதிர்கொண்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்த ஒரு விடயம் அவரை சிங்கப் பெண்ணாக காட்டியுள்ளது.

2019 – 2024 ஆட்சிக் காலங்களில் நீதிமன்றங்களில் வாபஸ் பெறப்பட்ட 102 வழக்குகளில் 65 மீள எடுக்கப்பட்டு மீண்டும் நீதிமன்றங்களுக்கு செல்கின்றன என அறிவித்து, எதிரணியினருக்கு வயிற்றோட்ட மாத்திரை கொடுத்துள்ளார் ஹரினி.

அந்த 65 வழக்குகளில் தாங்களும் இருப்போமோ என்ற அச்சம் எதிரணியில் உள்ள சில எம்.பிக்களுக்கும் முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கும் கலக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது ஆட்சித் தரப்பின் இலக்கு.

ராஜபக்சக்கள், மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கால பிரமுகர்கள் பலர் ஏற்கனவே ஊழல் வழக்குகளில் கைதாகி பிணையில் உள்ளனர். பொதுஜன பெரமுனவின் முக்கிய புள்ளியான ஜோன்சன் பெர்ணான்டோவும் அவரது மகனும் அண்மையில் கைதாகினர். போகிற போக்கைப் பார்க்கின் ராஜபக்சக்களோடு நெருக்கமாக இருந்தவர்கள் பலரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த நிலை தொடருமானால் அநுர அரசுக்கு எதிரான முன்னெடுப்புகள் குழிகளுக்குள் விழும். மாகாண சபைத் தேர்தல் காணாமல் போகும். புதிய அரசியலமைப்பு தயாரிப்பை காட்டி அரசின் ஆட்சிக் காலம் நீடிப்புக்கு உள்ளாகலாம். 1972ல் சிறிமாவோவும், 1978ல் ஜே.ஆரும் புதிய அரசியலமைப்பைக் காட்டித் தான் நாடாளுமன்ற ஆயுளை அவ்வப்போது நீடித்தார்கள் என்பது ரில்வினுக்கும் அநுரவுக்கும் தெரியாததா?

தெற்குக்குச் சமாந்தரமாக தமிழர் தரப்பு அரசியல் வேறு வகை ஓட்டம் நடத்துகிறது. எடுத்ததற்கெல்லாம் கட்சி உறுப்பினர்களிடம் விளக்கம் கேட்பதும் அவர்களை இடைநீக்கம் செய்வதும் தமிழரசு கட்சியின் பதில் செயலாளரது தினசரி வேலையாகி விட்டது. எப்படியாவது தமது பெயர் ஊடகங்களில் வந்தால் போதுமென இவர் நினைக்கிறார் போலும்.

வன்னிப் பிராந்திய முன்னாள் எம்.பி. சிவமோகன் சில நாட்களுக்கு முன்னர் கட்சியின் முன்னணி பிரமுகர்களை பெயர் கூறி விளாசித் தள்ளிய கண்டனங்களை எல்லாரும் படிக்க நேர்ந்தது. எனது அறிவுக்கு எட்டிய வகையில் கட்சித் தலைமையை இவ்வாறு கிழித்துத் தொங்கப்போட்ட ஓர் அறிக்கையை முன்னர் எப்போதும் படித்ததாக ஞாபகம் இல்லை.

சில நாட்களுக்கு முன்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசு கட்சிக்கு எதிராக சில கருத்துகளை தெரிவித்திருந்தார். தொடர்ந்து எங்களை அடித்தால் நாங்களும் திருப்பி அடிப்போம் என்று ஊடகங்கள் ஊடாக தமிழரசுக் கட்சி கஜேந்திரகுமாரை எச்சரித்திருந்தது. இவர் ஒரு பனங்காட்டு நரி. சலசலப்புக்கு அஞ்சமாட்டார்.

இப்போது சிவமோகனுக்கும் இவ்வாறான ஓர் எச்சரிக்கையை தமிழரசுத் தலைமை விடுமா? நிச்சயமாக மௌனம் தான் சாதிப்பார்கள். .

தமிழரசின் வடக்கு கிழக்கைச் சேர்ந்த முக்கியமான பலருடன் கடந்த சில நாட்களாக உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது, கட்சியின் பதில் தலைமை கண்களை மூடிக்கொண்டிருப்பதாக சிலர் சொல்கிறார்கள். இல்லையில்லை அவர் பதில் செயலாளரை கண்காணித்துக் கொண்டிருப்பதாக வேறு சிலரது கருத்து.

அரசமைப்புச் சபையில் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதியாகவுள்ள கிளிநொச்சி எம்.பி. சிறீதரன் மீது இப்போது கட்சியின் பார்வை திரும்பியுள்ளது. இவர் மீதான குற்றச்சாட்டுக்கு கட்சி விளக்கம் கேட்கவில்லை. ஆனால், அந்தப் பதவியிலிருந்து விலகுமாறு கடிதம் அனுப்பியுள்ளது.

இதனை விளக்கமாகச் சொல்வதானால் சிறீதரன் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென உள்வீட்டுக்காரர்கள் சொல்கிறார்கள்.

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

அப்படியென்றால் ஏன் இந்தக் கடிதம் என்ற கேள்வி எழுகிறது. எதிர்காலத்தில் இவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் அதற்கு பலம் கூட்ட இக்கடிதம் உதவலாம் என்று நம்புகிறார்களாம். அது மட்டுமன்றி சிறீதரனை கட்சியிலிருந்து வெளியேற்ற எவராவது முயற்சித்தால் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அதற்கு உடன்பட மாட்டாரென்றும் அவரது பதவிக்கான அதிகாரத்தை பயன்படுத்துவாரென்றும் மார்ட்டின் வீதியிலுள்ள மூத்தோர் கிளப்பில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

எல்லாவற்றையும் மீறி சிறீதரனை கட்சியிலிருந்து நீக்கம் செய்தால் அதன் பாதிப்பு கட்சிக்கே என்றும் தலைமை மேசையில் உள்ளவர்களுக்கு தெரியுமாம். சேலை முள்ளில் பட்டாலென்ன, முள் சேலையில் பட்டாலென்ன சேலைக்குத் தான் சேதம் என்ற நிலையில் கட்சி இருக்கிறது.

அதாவது சிறீதரனை கட்சியிலிருந்து நீக்கினால் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இப்போது தக்க வைத்துள்ள ஓர் ஆசனம் கூட இல்லாமல் போகும். சிறீதரன் சுயேட்சையாகக் கேட்டாலும் வெற்றி பெறுவார் என்பது கட்சிக்காரர்கள் அனைவருக்குமே தெரிந்த விடயம். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அண்மைய இந்திய மற்றும் நோர்வே பயணங்களை தமிழரசுச் கட்சியினர் அங்கலாய்ப்புடன் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பூரணமாக நடைமுறைப்படுத்த இந்தியா முன்வராது அசட்டையாக இருப்பதை தங்களுக்கான பின்னடைவாகக் கருதும் தமிழரசுக் கட்சி, மாகாண சபையை ஒதுக்கி விட்டு புதிய அரசியலமைப்பில் சமஷ்டி ஆட்சியைக் கோரும் கஜேந்திரகுமாரின் சர்வதேச பயணத்தையிட்டு பலவாறாக சிந்திக்கிறது.

ஏதோ ஒரு ஐரோப்பிய நாடு இதன் பின்னணியில் இருக்கலாம் என மூக்கில் விரலை வைத்து ஆட்டும் தமிழரசுக் கட்சியினர், ஒரு குறிப்பிட்ட நாட்டில் சந்தேகம் கொண்டுள்ளனர். எதுவானாலும் மலிவாகும் போது சந்திக்கோ சந்தைக்கோ வரும் தானே.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

09 ஜனவரி 2026 முதல் 16 ஜனவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 07 ஜனவரி 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 10 ஜனவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 11 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஶ்ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா (ஶ்ரீ) அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 15 ஜனவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 48வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 48வது ஆண்டு நினைவு நாள் 05 ஜனவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45ம் நாள் நினைவஞ்சலி




### திரு வில்வரத்தினம் அம்பிகைபாகன்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அம்பி என்று அன்பாக அழைக்கப்படும் திரு வில்வரத்தினம் அம்பிகைபாகன் அவர்களது 45ம் நாள் நினைவுநாள் 10 ஜனவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வில்வரத்தினம் அம்பிகைபாகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




10 ஜனவரி 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணலிங்கம் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினித் சற்குணலிங்கத்தின் 21வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் வினித் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அம்பி என்று அன்பாக அழைக்கப்படும் திரு வில்வரத்தினம் அம்பிகைபாகன் அவர்களது 45ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 ஜனவரி 2026 புதன்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 11 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஜனவரி 2026 திங்கட்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருந்த திருமதி சீலா சுகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஜனவரி 2026 திங்கட்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருந்த திருமதி சீலா சுகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஜனவரி 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறேம்குமார் கலாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜான் பிறேம்குமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜான் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




15 ஜனவரி 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் மொன்றியல், ரொறன்ரோவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஶ்ரீ என்று அன்பாக அழைக்கப்படும் திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## மக்கள் மனங்களில் என்றும் வாழும் சீலா சுகுமார்

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பதைக் காலம் காலமாகக் கூறி வந்தோம். ஆனால் சில பெண்கள், பின்னால் அல்ல பக்கத்தில் நின்று வாழ்க்கையைத் தாங்கும் தூண்களாக இருப்பார்கள். அத்தகைய உன்னத பெண்மணி திருமதி சீலா சுகுமார் அவர்கள்

திரு கணேசன் சுகுமார் அவர்கள் இன்று கனடாவில் தமிழ் மக்கள் மட்டுமல்லாது பல்லின மக்களிடையும் மதிப்பும் மரியாதையும் பெற்ற தொழில் அதிபராக விளங்குவதற்குப் பின்னால், அவரோடு கை கோர்த்து நின்ற வாழ்க்கைத் துணைவியார் சீலா சுகுமார் அவர்கள் இருந்தார்கள். ஆடம்பரமற்ற வாழ்க்கை, ஆழமான மனிதநேயம், பிறரது வலியைத் தன் வலியாகக் கருதும் மனப்பாங்கு இவையெல்லாம் இருவரதும் இயல்புகளாக இருந்தன.

குடும்பம் என்பது சுவர்களால் கட்டப்பட்ட ஒரு வீடு அல்ல. அன்பால் கட்டப்பட்ட ஒரு உலகம் என்பதைக் அவர் தன் வாழ்வில் நிரூபித்தார். கணவரின் தொழில் முயற்சிகளில் அவர் கை கொடுத்தது, கணக்குகளால் அல்ல. கருணையால் எவ்வளவு சம்பாதித்தோம்? என்பதைக் காட்டிலும், யாருக்கு உதவினோம்? என்ற கேள்வியே அவரின் தினசரி சிந்தனை.

கனடிய மண்ணில் நாம் வாழ்வதற்கு வாய்ப்பளித்த இந்த நாட்டிற்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற எண்ணம், திரு சுகுமார் கணேசன் அவர்களின் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தது. அதனால் தான் வைத்தியசாலைகள், பொதுநல அமைப்புகள், சமூகத் தேவைகள் எங்கு மனிதநேயம் தேவைப் பட்டதோ அங்கே அவர் மனம் தானாகவே சென்றது.

அதே நேரம், தாயகத்தின் நினைவும் அவரை விட வில்லை. போராலும் வறுமையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், மருத்துவ சேவைகள், புதிய தொழில் முனைவோருக்கான ஆதரவு இவையெல்லாம் அவர் விரும்பி ஆதரித்த துறைகள். அத்தனையையும் மனம் நோகாது ஓர் ஒற்றைப் புன்னகையோடு தன் கணவரின் செயலுக்குப் பக்கத்தில் நின்றவர் திருமதி சீலா சுகுமார் அவர்கள்.

2022ஆம் ஆண்டு ஜனவரி 08 அன்று அவர் இறைவனடி சேர்ந்தார். அந்த நாள், குடும்பத்திற்கே அல்ல அவர் தொட்ட வாழ்வுகளுக்கும் ஒரு மௌனமான இழப்பின் நாளாக மாறியது. ஆனால் உடல் மறைந்தாலும், அவரின் பண்புகள் மறையவில்லை. அதற்கு சான்றாக, இன்று அவரின் பெயரில் தொடர்ந்து நடைபெறும் பல மகத்தான பொதுப்பணிகள்.



நான் இல்லை என்றால் என்ன? என்று அவர் ஒரு போதும் நினைத்ததில்லை. நான் இருந்த போது என்ன செய்தேன்? என்பதே அவரின் வாழ்வின் சுருக்கம். அந்தச் சிந்தனையே இன்று திரு கணேசன் சுகுமார் அவர்களை, தன் துணைவியார் பெயரில் பல சேவைகளைச் செய்யத் தூண்டுகிறது. அது ஒரு வாழும் பாரம்பரியம்.

திருமதி சீலா சுகுமார் அவர்கள், மேடைகளில் பேசாதவர் விளம்பரங்களில் தோன்றாதவர். ஆனால் மனிதர்களின் மனங்களில் நிரந்தரமாகத் தங்கியவர். கணவரின் கையைப் பிடித்து, அவரின் காரியங்களில் கைகொடுத்து குடும்பத்தையும் சமூகத்தையும் இணைத்த ஒரு பாலமாக அவர் வாழ்ந்தார்.

இன்றும் எங்கோ ஒரு வைத்தியசாலையின் வார்டில், ஒரு நோயாளியின் சுவாசத்தில் எங்கோ ஒரு புதிய தொழில் முனைவோரின் கனவில் எங்கோ ஒரு பாதிக்கப்பட்ட குடும்பத்தின் நம்பிக்கையில் திருமதி சீலா சுகுமார் அவர்கள் உயிருடன் இருக்கிறார். அவரது ஆத்மா நீடுதுயல் கொள்ள அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன். ஓம் சாந்தி!

அன்புடன் T.K. பரமேஸ்வரன்

# பழமை வாதத்திற்கும் நவீனத்துவத்திற்கும் இடையிலான கருத்தியல் மோதலா? ஹரினி எதிர் கொள்ளும் சவால்கள்?

இலங்கை அரசியலில் நீண்டகாலமாக நிலவி வந்த குடும்ப அரசியல் மற்றும் பாரம்பரியக் கட்டமைப்புகளை உடைத்து, ஒரு கல்வியாளராகவும் பெண்ணியவாதியாகவும் பிரதமர் பதவியை எட்டியவர் கலாநிதி ஹரினி அமரசூரிய.

ஒரு பேராசிரியராகப் பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்களில் ஒலித்த அவரது குரல், இன்று நாட்டின் கொள்கை வகுக்கும் உயர்மட்டத்தில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

எனினும் அவரது அரசியல் பிரவேசம் என்பது அத்தனை எளிதானதாக அமையவில்லை மாறாக அவர் தனது தோற்றம், தனிப்பட்ட வாழ்வு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எனப் பல தளங்களில் கடுமையான விமர்சனங்களையும் சர்ச்சைகளையும் எதிர்கொண்டு வருகிறார்.



கல்வி அமைச்சராகவும் பொறுப்பு வகிக்கும் ஹரினி அமரசூரிய, இலங்கையின் கல்வித்துறையில் நவீன மாற்றங்களைக் கொண்டுவர முயலும் வேளையில் 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பாடப்புத்தகத்தில் இடம்பெற்ற ஒரு இணையத் தொடர்ப்பு (Link) பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாடப் பொருளோடு சம்பந்தப்படாத தவறான வழிக்கு இட்டுச் செல்லும் அந்த இணையத்தளம் குறித்த விவகாரம், சமூக ஊடகங்களில் காட்டுத் தீயாகப் பரவியது. இது ஒரு தற்செயலான தொழில்நுட்பத் தவறாகப் பார்க்கப்படாமல் கலாச்சாரச் சீரழிவுக்கான திட்டமிட்ட முயற்சி என எதிர்க்கட்சிகளால் சித்தரிக்கப்படுகின்றது

ஒரு கல்வியாளராக இருக்கும் பிரதமரின் கீழ் இவ்வாறான தவறு நடந்தது அவரது நிர்வாகத் திறமை குறித்த கேள்விகளை எழுப்பியதுடன் பழமைவாதத் தரப்பினர் அவர் மீது தாக்குதல் நடத்தப் பலமான ஒரு காரணத்தையும் வழங்கியுள்ளது.

ஹரினி அமரசூரிய எதிர்கொள்ளும் மற்றொரு பிரதான விமர்சனம் அவரது தோற்றம் சார்ந்தது. இலங்கை அரசியலில் பெண் தலைவர்கள் என்றாலே 'கண்டிச் சேலை' அணிய வேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தை உடைத்து, மிகவும் எளிமையான குர்தா மற்றும் சாதாரண உடைகளை அவர் அணிவது ஒரு தரப்பினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அவரது தலைமுடி அலங்காரம் மற்றும் ஆளுமை குறித்துச் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் தனிப்பட்ட கேலிகள் (Body Shaming), இலங்கையின் அரசியல் களம் இன்னும் பெண்களை அவர்களது ஆடை மற்றும் தோற்றத்தை வைத்தே மதிப்பிடும் மனநிலையில் இருப்பதைக் காட்டுகிறது.

கலாச்சாரப் காவலர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் பலர், அவரது அறிவார்ந்த உள்ளடக்கத்தை விடுத்து அவரது உடையில் குறை காண்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

அவரது தனிப்பட்ட வாழ்வும் விமர்சனங்களுக்குத் தப்பவில்லை. அவர் மணம் முடிக்காதவர் என்பது குறித்தும், அவரது மத நிலைப்பாடுகள் குறித்தும் தேவையற்ற விவாதங்கள் பொதுவெளியில் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு மேல்தட்டுப் பின்புலத்தில் இருந்து வந்தவர் என்பதால், சாதாரண மக்களின் வறுமையையோ அல்லது உணர்வுகளையோ அவரால் புரிந்து கொள்ள முடியாது என்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்படுகிறது.

ஆனால், யதார்த்தத்தில் ஒரு பெண்ணியவாதியாக அவர் முன் வைக்கும் முற்போக்கான கருத்துக்களும், ஆணாதிக்கச் சிந்தனைகளைச் சாடும் அவரது போக்கும், மாற்றத்தை விரும்பாதவர்களுக்குப் பெரும் சவாலாகத் தெரிகிறது.

சுருக்கமாகச் சொன்னால் ஹரினி அமரசூரிய மீதான சர்ச்சைகள் என்பவை வெறும் நிர்வாகத் தவறுகள் சார்ந்தவை மட்டுமல்ல அவை இலங்கையின் நீண்டகாலப் பழமைவாதச் சமூகத்திற்கும், நவீனத்துவத்தை நோக்கி நகரத் துடிக்கும் புதிய தலைமுறைக்கும் இடையிலான கருத்தியல் மோதலாகும்.

பாடப்புத்தகக் குளறுபடிகள் போன்ற நிர்வாகப் பிழைகளைச் சரி செய்து கொண்டு, தனிப்பட்ட விமர்சனங்களைக் கடந்து அவர் எடுக்கும் முடிவுகளே, இலங்கையின் எதிர்காலப் பெண் அரசியல்வாதிகளுக்கான புதிய பாதையைத் தீர்மானிக்கும்.

இதேவேளை ஹரினி அமரசூரியவின் அரசியல் பயணம் தேசிய மக்கள் சக்தியின் (NPP) ஊடாக அமைந்தாலும், அதன் முதுகெலும்பாக இருக்கும் ஜனதா விமுக்தி பெரமுன (JVP) கட்சியுடன் அவருக்கு இருக்கும் உறவு குறித்து அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் விவாதங்கள் உள்ளன.

JVP பாரம்பரியமாக ஒரு மார்க்சிச – லெனினிச மற்றும் சிங்கள தேசியவாத பின்புலத்தைக் கொண்டது. ஆனால், ஹரினி ஒரு தாராளவாத முற்போக்கு சிந்தனை கொண்ட 'எலைட்' வர்க்கக் கல்வியாளராகப் பார்க்கப்படுகிறார். இந்த இரு வேறுபட்ட துருவங்கள் எப்படி இணைந்து பயணிக்க முடியும் என்ற சந்தேகம் ஆரம்பத்திலிருந்தே உள்ளது.

கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் (Cadres) ஹரினியின் தாராளவாதக் கருத்துக்கள் கட்சியின் நீண்டகாலக் கொள்கைகளை நீர்த்துப் போகச் செய்து விடுமோ என அஞ்சுவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக வெளியுறவுக் கொள்கை மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான (IMF போன்றவை) அணுகுமுறையில் ஹரினியின் மென்மையான போக்கு, JVPஇன் தீவிரப் போராட்டக் குணத்துடன் முரண்படுவதாகத் தெரிகிறது.

அமைச்சரவை நியமனங்கள் மற்றும் கொள்கை முடிவுகளின் போது, JVPஇன் மூத்த தலைவர்களுக்கும் ஹரினிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகச் சில ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நேரடி ஆதரவு ஹரினிக்கு இருப்பதால் இந்த முரண்பாடுகள் தற்போது கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எது எப்படி இருப்பினும் அநுர குமார தலைமையிலான NPP அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு வலுவான அரசியல் காரணங்களை தேடுவோர் தனிப்பட்ட விடயங்களுக்குள் ஈர்க்கப் படுவதனை அவதானிக்க முடிகிறது.

மறுபுறம் கடந்த 77 வருட கால டீல் அரசியல் முடிவுக்கு வந்துள்ளமை அனைத்து தரப்பினரையும் உறைய வைத்திருக்கிறது. இவற்றையெல்லாம் எதிர் கொண்டு, அநுரவும், ஹரினியும், அவர்களின் NPP அரசாங்கம் தாக்குப் பிடிக்குமா? என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். (நன்றி:- நடராஜா குருபரன் முகநூல்)

## தையிட்டி விகாரைக்கு ஆக்கிரமித்த தனியார் காணிகளை விடுவிக்க மறுப்பு?

யாழ்ப்பாணம் தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு, திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு கொழும்பில் கூடிக் கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

இதன் போதே திஸ்ஸ விகாரைக்காக அபகரிக்கப்பட்ட காணிகளை பகுதியளவேனும் விடுவிப்பதற்கு திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். அந்தக் காணி முற்றுமுழுதாக விகாரைக்குச் சொந்தம் என்பதால் அதை விடுவிக்கும் எண்ணம் இல்லை என்றும், அவ்வாறு விடுவிப்பது பொருத்தமாக இருக்காது எனவும் அவர்கள் அந்தக் கலந்துரையாடலில் கூறியுள்ளனர்.

திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பகுதியைத் தவிர, ஏனைய காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளிவந்திருந்தன


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அநுர அரசாங்கம் மாற்றமா? மறு பதிப்பா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மாற்றம் என்ற சொல்லுக்கு எப்போதும் அதிக மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மாற்றம் உண்மையானதா, அல்லது பழைய அதிகார அரசியலின் புதுப்பித்த பதிப்பா என்பதே காலம் தோறும் எழும் கேள்வி. அந்த வகையில், இன்று அநுர அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது, மீண்டும் ஒருமுறை அந்தக் கேள்வி வலுவாக எழுகிறது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்து சிறையில் அடைத்தமை, வடக்குத் தமிழர்களிடமும் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் ஓர் அளவிலான மனநிறைவையும் எதிர்பார்ப்பையும் உருவாக்கியது. பல ஆண்டுகளாக அதிகாரத்தின் துணையுடன் தமிழ் அரசியலை நசுக்கிய ஒருவருக்கு எதிரான இந்த நடவடிக்கை, நீதியின் தொடக்கம் என பலரால் கருதப்பட்டது. அந்த மனநிலையை அரசாங்கம் நன்கு உணர்ந்திருந்தது.

ஆனால் அந்த திருப்தி அரசியல் நீடிக்கவில்லை. ஓரிரு நாட்களுக்குள்ளாகவே, சில புலம் பெயர்ந்த தமிழர்களின் பெயர்கள் தடை செய்யப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்ட செய்தி, அநுர அரசாங்கத்தின் உண்மையான அரசியல் திசையை வெளிப்படுத்தியது. டக்ளஸ் தேவானந்தா கைது ஒரு பக்கம், புலம்பெயர்ந்த தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளை அடக்கும் முயற்சி மறுபக்கம் இந்த இரண்டையும் தனித்தனியாகப் பார்க்க முடியாது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் என்றாலே சந்தேகக் கண், கண்காணிப்பு, தடைப் பட்டியல் என்ற பழைய அரசியல் நடைமுறைகள், புதிய அரசாங்கத்தின் காலத்திலும் தொடர்வது ஏமாற்றமளிப்பதோடு, ஆபத்தானதுமாகும். கடந்த கால



அரசாங்கங்கள் செய்த அதே செயலை, இப்போது வேறு முகத்தோடும் வேறு மொழியோடும் செய்வதில், அடிப்படையில் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது?

ஒரு புறம் ஜனநாயகம், மனித உரிமை, ஊழலுக்கு எதிரான அரசியல் என்று பேசும் அரசாங்கம், மறுபுறம் ஒரு குறிப்பிட்ட இனத்தின் அரசியல் குரலை மட்டுமே தொடர்ந்து குறி வைப்பது, அதன் உள்ளார்ந்த இனவாத மனப்பாங்கை சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது. உண்மையில் இது பாதுகாப்பு நடவடிக்கையா, அல்லது சர்வதேச அளவில் தமிழர்களின் அரசியல் குரலை அடக்குவதற்கான திட்டமிட்ட செயற்பாடா என்பதே இன்றைய விவாதமாகியுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா கைது நீதியின் அடிப்படையில் நடந்தது என்றால், அதனைத் தொடர்ந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் தடை நடவடிக்கைகளும் அதே நீதித் தளத்தில் விளக்கப்பட வேண்டியவை. ஆனால் அந்த விளக்கங்கள் இல்லாத போது, இது அரசியல் சமநிலை அல்ல் அரசியல் யுக்தி என்றே தோன்றுகிறது.

தமிழ் மக்களுக்கு இனி இது புதிய அனுபவமல்ல. முன்பு ராஜபக்ச அரசாங்கங்கள் செய்ததை, இப்போது அநுர அரசாங்கம் மாற்று அரசியல் என்ற பெயரில் செய்கிறது என்றால், அதனை மாற்றம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. முகங்கள் மாறலாம் ஆனால் அரசின் மனோபாவம் மாறவில்லை என்றால், அதன் விளைவும் மாறப்போவதில்லை.

இலங்கை உண்மையில் புதிய அரசியல் பாதையில் பயணிக்க விரும்பினால், கைது தடை, பட்டியல் அரசியல் அல்ல நீதியும் சமத்துவமும் தான் அதன் அடித்தளமாக இருக்க வேண்டும். ஒரு இனத்திற்கு மட்டும் சட்டம் கடுமையாகவும், மற்ற இனங்களுக்கு அது இலகுவாகவும் அமல்படுத்தப்படும் வரை, எந்த அரசாங்கமும் மாற்றத்தின் அடையாளமாக கருதப்பட முடியாது.

அநுர அரசாங்கம் இன்று ஒரு வரலாற்றுச் சந்திப்பில் நிற்கிறது. மாற்றத்தின் அடையாளமாக மாறப்போகிறதா? அல்லது பழைய இனவாத அரசியலின் இன்னொரு மறுபதிப்பாகச் சிக்கப்போகிறதா? இந்தக் கேள்விக்கு விடையை தரப்போவது, அரசாங்கத்தின் எதிர்வரும் செயற்பாடுகளே.

# நாங்கள் என்ன செய்ய வேண்டுமென யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது - ட்ரம்புக்கு கியூபா ஜனாதிபதி பதிலடி!



காலம் கடப்பதற்குள் அமெரிக்க அரசுடன் கியூபா ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது என கியூபா நாட்டு ஜனாதிபதி மிகுவெல் டயாஸ் கெனல் பெர்முடெஸ் தெரிவித்துள்ளார்.

இனி வெனிசுவெலாவில் இருந்து கியூபாவுக்கு எரிபொருள் வர்த்தகம் நடை பெறாது என்றும் காலம் கடப்பதற்குள் அமெரிக்காவுடன் கியூபா ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என்றும் ட்ரம்ப் சமூக ஊடகத்தில் பதிவு செய்துள்ளார்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே கியூபா ஜனாதிபதி மேற்கண்டவாறு தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

மனித உயிர்கள் உட்பட அனைத்தையும் வியாபாரமாக மாற்றுபவர்களுக்கு கியூபாவை நோக்கி விரல் நீட்ட எந்த தார்மீக அதிகாரமும் இல்லை. கியூபாவின் மக்கள் இறையாண்மையுடன் தங்களுக்கான அரசியல் மாதிரியை தேர்வு செய்வதை பொறுக்க முடியாமல் நமது நாட்டின் மீது வெறுப்பை கொட்டுகிறார்கள்.

கியூபாவின் பொருளாதார நெருக்கடிக்கு புரட்சியை குறை கூறுபவர்கள் நாக்கை அடக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அமெரிக்கா கடந்த 60 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த கழுத்தை நெரிக்கும் நடவடிக்கைகளின் பலனை இப்போது அனுபவித்து வருகிறது.

கியூபா ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடு. நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது. கியுபா ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அது 66 ஆண்டுகளாக அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேலும் கியூபா யாரையும் அச்சுறுத்துவதில்லை. கடைசி சொட்டு இரத்தம் உள்ள வரை தாயகத்தைப் பாதுகாக்க கியூபா தயாராக உள்ளது என்று கூறியுள்ளார்.

## கியூபாவை எச்சரித்த ட்ரம்ப்

அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கியூபாவை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். இல்லையேல், வெனிசுவேலாவில் இருந்து கியூபாவிற்கு செல்லும் எண்ணெய் மற்றும் நிதி விநியோகத்தை நிறுத்தப் போவதாகவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

எனவே 'மிகவும் தாமதமாகும் முன்பே' அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கியூபாவை அவர் வலியுறுத்தியுள்ளார்.

கியூபா தனது அன்றாட எண்ணெய் தேவையில் சுமார் 50 சதவீதத்திற்கு வெனிசுவேலாவையே நம்பியுள்ளது. ஆனால், மதுரோவின் வீழ்ச்சிக்குப் பிறகு, கியூபாவிற்கு இனி 'பூச்சியம்' அளவிலேயே எண்ணெய் மற்றும் பணம் செல்லும் என்று ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கியூபா பல ஆண்டுகளாக வெனிசுவேலாவின் எண்ணெய் மற்றும் பணத்தில் வாழ்ந்து வந்தது. அதற்குப் பதிலாக கியூபா அங்குள்ள சர்வாதிகாரிகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கியது. ஆனால் இனி அது நடக்காது!' மேலும், வெனிசுவேலாவில் கடந்த வாரம் நடந்த அமெரிக்கத் தாக்குதலில், மதுரோவிற்கு பாதுகாப்பு வழங்கிய 32 கியூப வீரர்கள் கொல்லப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

வெனிசுவேலாவிற்கு இனி கியூபாவின் பாதுகாப்புத் தேவை இல்லை என்றும், உலகின் வலிமையான அமெரிக்க இராணுவம் இனி வெனிசுவேலாவைப் பாதுகாக்கும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சரும், கியூப வம்சாவளியைச் சேர்ந்தவருமான மார்கோ ரூபியோ, கியூபாவின் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடும் என்ற சமூக வலைத்தளப் பதிவை ட்ரம்ப் பகிர்ந்து அது நன்றாகத்தான் இருக்கும் என்று கருத்து தெரிவித்துள்ளார். இது கியூப அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கியூப வெளியுறவுத்துறை அமைச்சர் புருனோ ரோட்ரிக்ஸ், அமெரிக்காவின் இந்தச் செயலை 'ஒரு சர்வதேச குற்றவியல் நடவடிக்கை' என்று விமர்சித்துள்ளார். மேலும், கொல்லப்பட்ட கியூப வீரர்களை 'மாவீரர்கள்' என்று கியூபா கௌரவித்துள் ளது.

## வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதி ட்ரம்ப்?

இதேவேளை வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி தான் தான் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவருடைய ட்ரூத் சோசியல் சமூக ஊடக தளத்தில், ஒரு புதிய புகைப்படம் ஒன்றை பகிர்ந்துள்ளார்.

அந்த புகைப்படத்தில் அமெரிக்காவின் 45ஆவது மற்றும் 47ஆவது ஜனாதிபதி என்றும் உப ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை பகிரப்பட்ட இந்தப் பதிவில், வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி, பதவியில் இருக்கும் ஜனவரி 2026 என்ற பதவியுடன் டிரம்பின் அதிகாரப்பூர்வ உருவப்படம் இடம் பெற்றுள்ளது.

எனினும், சர்ச்சைக்குரிய இந்த பதிவுக்கு வேறு எந்த தலைப்பையும் வைக்கவோ அல்லது வேறு எந்த தகவலையோ ட்ரம்ப் பகிரவில்லை. வெனிசுலாவின் எண்ணெய் வளங்கள் மீது ட்ரம்ப் குறி வைத்திருக்கும் நிலையில், இந்த பதிவு வெளிவந்துள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டமையும் குறிப்பிடத்தக்கது

# பிரதமர் பதவியில் மாற்றமில்லை!
## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் டில்வின் சில்வா

இலங்கையின் சமகால அரசியலில் ‘உண்மை’ என்பதை விட ‘வதந்தி’ வேகமாகப் பயணிக்கும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம். சமூக ஊடகங்கள், அரசியல் எதிர்மறை பிரச்சாரங்கள், அதிகார மையங்களுக்கு இடையிலான மறைமுகப் போர்கள் இவை அனைத்தும் சேர்ந்து அரசியல் உரையாடலை ஒரு நிரந்தர சந்தேக நிலைக்கு தள்ளியுள்ளன.

அந்தப் பின்னணியில் தான், தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாகப் பரப்பப்பட்ட செய்திகளும், அதற்கு எதிராக ஜே.வி.பி. பொதுச்செயலாளர் டில்வின் சில்வாவும், மூத்த தலைவர் லால்காந்தவும் வெளியிட்ட கடுமையான மறுப்புகளும் அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றன.

பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்ற வதந்தி, சாதாரணமாக உருவான ஒன்று அல்ல. புதிய அரசாங்கம் பதவியேற்ற ஒவ்வொரு தருணத்திலும், அமைச்சரவைக்குள் பிளவுகள் இருப்பதாகக் காட்டுவது இலங்கையின் பாரம்பரிய எதிர்க்கட்சித் தந்திரமாகவே இருந்து வருகிறது.

2015இன் நல்லாட்சி காலம் முதல், 2022இன் அரசியல் வீழ்ச்சி வரை, ‘உள்பிளவு’ என்ற சொல்லே பல அரசாங்கங்களை அரசியல் ரீதியாகக் காயப்படுத்த பயன்படுத்தப்பட்டது. அந்த வரலாற்றுச் சூழலின் தொடர்ச்சியாகவே, NPP அரசாங்கத்திற்கும் அதே அரசியல் ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது.

எனினும் இந்த விடயத்தில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஹரினியை ஆதரித்து நிற்கின்றன. எதிர்கட்சிகளுடன் நிற்கும் தமிழ்பேசும் கட்சிகளின் நிலை குறித்து தெளிவான நிலைப்பாடு பகிரப்படவில்லை.

இந்த நிலையில், JVP யின் இரும்பு மனிதனாகவும் NPPயின் அத்திவாரமாகவும் கருதப்படும் டில்வின் சில்வாவின் அறிக்கை, ஒரு தனிநபரைப் பாதுகாப்பதற்கான விளக்கம் மட்டுமல்ல் அது அரசாங்கத்தின் ஸ்திரத்





தன்மையை அரசியல் ரீதியாக உறுதிப்படுத்தும் முயற்சியாகும்.

ஹரிணி அமரசூரியவை நீக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்ற அவரது கூற்று, பிரதமர் பதவியைச் சுற்றிய வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, அதிகார மையம் இன்னும் ஒருங்கிணைந்தே உள்ளது என்ற செய்தியையும் வெளியிடுகிறது.

இலங்கையின் அரசியலில் இந்த ஒருங்கிணைப்பு அறிவிப்பு மிக முக்கியமானது. ஏனெனில், பொருளாதார நெருக்கடி, சமூக அதிருப்தி, இன மத அடையாள அரசியல் ஆகியவை இன்னும் முழுமையாக மறையாத சூழலில் அரசியல் ஸ்திரத்தன்மை என்பதே ஒரு அரசியல் மூலதனமாக மாறியுள்ளது.

ஹரிணி அமரசூரிய இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர், இவர் ஒரு அடையாளம் (symbol) மட்டுமல்ல அவர் ஒரு அரசியல் மாற்றத்தின் முகம். கல்வித் துறையில் நீண்ட அனுபவம் கொண்டவர் என்பதுடன் சமூக சீர்திருத்த அரசியலை கல்வி வழியாக முன்னெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிநிதி.

அதனால் தான், கல்வி மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான சர்ச்சைகள், சாதாரண நிர்வாகத் தவறுகளாக இல்லாமல், அரசியல் மோதல்களாக மாற்றப்படுகின்றன. பாடத்திட்டம், பாடப்புத்தகம், கல்வி உள்ளடக்கம் இவை அனைத்தும் இலங்கையில் எப்போதும் அரசியல் போர்க் களங்களாகவே இருந்துள்ளன.

1970களில் மொழி கல்வி விவகாரம், 1980—90களில் வரலாற்றுப் பாடநூல்கள், இன்றைக்கு ‘மதிப்பீடுகள்’ மற்றும் ‘அடையாளங்கள்’ காலம் மாறினாலும், கல்வி அரசியல் மையத்தில் இருப்பது மாறவில்லை. அதனால் தான், கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படும் என்ற ரில்வின் சில்வாவின் அறிவிப்பு, அரசாங்கத்தின் தற்காப்பு அரசியலை வெளிப்படுத்துகிறது.

தவறு எங்கே நிகழ்ந்தது என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்வது, ஒருபுறம் நிர்வாகப் பொறுப்புணர்வையும், மறுபுறம் எதிர்க்கட்சிகளின் அரசாங்கம் கல்வியை அழிக்கிறது என்ற குற்றச்சாட்டையும் சமநிலைப்படுத்தும் முயற்சியாகும்.

இதே விவகாரத்தில் JVPயின் பழம்பெரும் தொழில்சங்கத் தலைவரும், முக்கியஸ்த்தரும், அமைச்சருமான லால்காந்தின் கருத்துக்கள், NPP–JVP அரசியலின் இன்னொரு முகத்தை வெளிப்படுத்துகின்றன.

அவர் பேசும் மொழி மென்மையான நிர்வாக மொழி அல்ல் அது நேரடியான, தாக்குதல் மிகு அரசியல் மொழி. கல்வி மறுசீரமைப்பை விமர்சிப்பவர்களின் கல்வித் தகைமை குறித்து அவர் எழுப்பும் கேள்விகள், இலங்கையின் அறிவுசார் அரசியல் விவாதத்தின் தரம் குறித்த ஒரு கடுமையான விமர்சனமாகவும் பார்க்கப்படலாம்.

குறிப்பாக, மிகிந்தலையில் இருக்கும் ஒரு காட்டுமிராணிடியின் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கது எனக் கூறுவதன் மூலம், சில அரசியல் மத தலைவர்கள் பயன்படுத்தும் அவதூறு, அருவருப்பான மொழி குறித்து அவர் கடுமையாக எதிர்வினை ஆற்றுவது, ‘நாகரிக அரசியல்’ versus ‘அருவருப்பு அரசியல்’ என்ற இரு முனைகளுக்கிடையிலான மோதலை வெளிக் கொணர்கிறது.

மொத்தத்தில், பிரதமர் பதவியில் மாற்றமில்லை என்ற அறிவிப்பு, ஒரு நபரைப் பற்றிய செய்தி அல்ல. அது இலங்கையின் சமகால அரசியலில் நடைபெறும் மூன்று முக்கியப் போராட்டங்களின் வெளிப்பாடு:

ஒன்று புதிய அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மைக்கான போராட்டம்

இரண்டு கல்வி வழியாக சமூக மாற்றத்தை முன்னெடுக்க விரும்பும் அரசியல் மற்றும் அதற்கு எதிரான பழைய அதிகாரக் குழுக்களுக்கு இடையிலான போராட்டம்

மூன்று வதந்தி, அவதூறு, சமூக ஊடக அரசியல் ஆகியவற்றுக்கு எதிரான அரசியல் கட்டுப்பாட்டு முயற்சி.

இந்தப் பின்னணியில், ஹரிணி அமரசூரிய பிரதமராக தொடர்வாரா என்பதைக் காட்டிலும், அவர் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் மாற்றம் நிலைத்திருக்குமா என்பதே இலங்கையின் சமகால அரசியலில் உண்மையான கேள்வியாக உள்ளது.

# புதிய கல்வி மறுசீரமைப்பு பற்றிய போலியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து அரசை பலவீனப்படுத்தும் முயற்சி வெற்றி பெறாது

அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்விக் கொள்கை தொடர்பில் போலியான மற்றும் திரிபுப்படுத்தப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கலாம், பலவீனப்படுத்தலாம் என்று விமர்சனங்களை முன்வைப்பவர்கள் நினைக்கிறார்கள். நாட்டுக்கு பொருந்தும் வகையிலான கல்வி கொள்கையை அமுல்படுத்துவோம். விமர்சனங்களை முன் வைப்பவர்களின் அரசியல் நோக்கம் ஒருபோதும் வெற்றிப் பெறாது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் 10 ஜனவரி 2026 சனிக்கிழமை மாலை நடைப் பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முறைமை மாற்றத்தை நோக்கிச் செல்வது ஒன்றும் இலகுவானதல்ல, கடும் எதிர்ப்புகள் எழும்.இதுவரை காலமும் இந்த கட்டமைப்பில் சலுகைப் பெற்றவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். பெற்றுக் கொண்ட சலுகை நீங்கும் போது அதனை எதிர்ப்பார்கள்.

ஒரு நாளில் ஒரு இரவில் கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த முடியாது. இதனால் தான் புதிய கல்வி கொள்கையில் தொழிற்றுறை கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

புதிய கல்விக் கொள்கை நாட்டுக்கு அவசியமானது. பிள்ளைகள் மற்றும் கல்வி தொடர்பில் அக்கறை இல்லாதவர்களே புதிய கல்வி கொள்கையை எதிர்க்கிறார்கள்.

அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்விக் கொள்கை தொடர்பில் போலியான மற்றும் திரிபுப்படுத்தப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி அரசாங்



கத்தை நெருக்கடிக்குள்ளாக்கலாம், பலவீனப்படுத்தலாம் என்று விமர்சனங்களை முன்வைப்பவர்கள் நினைக்கிறார்கள். நாட்டுக்கு பொருந்தும் வகையிலான கல்வி கொள்கையை அமுல்படுத்துவோம். விமர்சனங்களை முன்வைப்பவர்களின் அரசியல் நோக்கம் ஒரு போதும் வெற்றிப் பெறாது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம் என்றார்.

புத்தாண்டு பிறந்த பின் நடந்த முதலாவது போராட்டம் தையிட்டியில் நடந்தது. அது நடந்த அதே நாளில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் நோ லிமிட் பெருமெடுப்பில் திறக்கப்பட்டது. தையிட்டிக்கு வந்த ஜனத்தையும் நோ லிமிட்டுக்கு வந்த ஜனத்தையும் ஒப்பிட்டு சமூகவலைத் தளங்களில் பரவலாக குறிப்புகள் வெளிவந்தன.




போராட்டத்துக்குப் போன மக்களை விடவும் நோ லிமிட்டுக்குப் போன மக்கள் தான் அதிகம். ஆனால் அது தான் சமூக யதார்த்தம். உலக யதார்த்தம்.

மகாஜனங்கள் எப்பொழுதும் நுகர்வுத் தாகத்தோடு இருப்பார்கள். இப்போதுள்ள சமூக வலைத்தளச் சூழலில்

# நுகர்வுத் தாகத்துக்கு நோ மிலிட்




காணொளி யுகத்தில் காசு கொடுத்துச் செய்யப்படும் விளம்பரங்கள் மக்களின் பசியை தாகத்தை விடுப்புணர்வை மேலும் அதிகப்படுத்தும். அந்த டிஜிட்டல் விளம்பரங்களால் ஆட்கொள்ளப்பட்டு அங்கே என்ன இருக்கிறது என்று பார்க்க மக்கள் வருவார்கள்.

பெரு வணிக நிறுவனங்கள் திட்டமிட்டு சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் நுகர்வு அலையை நுகர்வுப் பசியை உற்பத்தி செய்யும். அந்த அலைக்குள் அள்ளுபட்டு மக்கள் வருவார்கள். யாழ்ப்பாணத்தின் உயர்தர உணவு விடுதிகளுக்கு இரவுகளில் சென்றால் தெரியும். அங்கு குடும்பமாக வந்து சாப்பிடுவது புலம் பெயர்ந்த தமிழர்கள் மட்டும் அல்ல அவர்களை விட அதிக தொகையில் உள்ளூர் மக்கள் வருவார்கள். உயர்தர உணவகங்களில் சாப்பிடுவது என்பது ஒரு பொதுப் போக்கு. ஒரு விடுப்பார்வம். ஒரு வித எடுப்பு. சமூகத்தில் அதிகமாக உழைக்கும் அனேகரை அங்கே காண முடியும்.

ஆனால் எல்லா அலைகளைப் போலவே இந்த அலையும் ஒரு நாள் தணிந்து விடும். ஹீல்ஸ், நதியாஸ், நோ லிமிட் போன்றவற்றுக்கு எப்பொழுதும் மக்கள் வெள்ளம் அலைமோதுவதில்லை. பண்டிகை நாட்களைத் தவிர.

அது போலவே பேர்க்கர் கிங்,காலித் பிரியாணி போன்ற உயர்தர உணவகங்களில் எல்லா ஆசனங்களும் என்றென்றும் நிரம்பி இருப்பதில்லை. டிஜிட்டல் ப்ரோமோஷன் மூலம் தூண்டப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட எந்த ஓர் அலையும் நிரந்தரமானது அல்ல. அலைகள் நிரந்தரமானவை அல்ல.

மனிதர்கள் அரசியல் விலங்குகள் மட்டுமல்ல இலத்திரனியல் வலைக்குள் சிக்கிய இரண்டு கால் பூச்சிகளுந் தான். அரசியலுக்கும் அப்பால் அவர்களுக்கென்று தெரிவுகள், ஈடுபாடுகள், பசி, தாகம் இருக்கும். போர்க் காலங்களில் சமூகம் மூடப்பட்டிருக்கும் போது தெரிவுகள் குறையும். நெருக்கடிகள் அதிகமாக இருக்கும். அப்பொழுது ஒரு மக்கள் கூட்டத்தை அரசியல்பயப்படுத்துவது இலகுவானது. போர், அடக்குமுறை போன்றன ஒரு சமூகத்தை உணர்வுபூர்வமாக நொதிக்க வைக்கும் போது அங்கே மக்களை அரசியலில் உணர்திறன் அதிகமுடையவர்களாக இருப்பதுண்டு. கடல் அமைதியாக இருக்கும் போது மீன் அதிகம் படாது. கடல் கொந்தளிக்கும் நாட்களில் மீன் அலைக்குத் தப்பி வலைக்குள் விழும். எனவே ஒரு மக்கள் கூட்டத்தைத் திரட்டுவதற்கு, நொதிக்க வைப்பதற்கு ஒரு கூட்டு உளவியல் சூழல் இருக்க வேண்டும். அது இல்லையென்றால் அல்லது ஏற்கனவே உள்ள காரணங்களை உணர்வுபூர்வமானவைகளாக மாற்ற முடியவில்லை என்றால் அரசியல் விலங்குகள் திட்டமிட்டு உருவாக்கப்படும் வணிக நுகர்வு அலைகளால் அடித்துச் செல்லப்படும்.

தையிட்டி ஓர் உதாரணம். அங்கே போராட வேண்டிய தேவை இருக்கிறது. போராடும் போது அதைத் தடுப்பதற்கு போலீஸ் வருகிறது. அதாவது போராட்டம் தீவிரம் அடைந்தால் ஒடுக்குமுறை அதிகரிக்கும். ஒடுக்கு முறை அதிகரித்தால் அதற்கு எதிரான போராட்ட உணர்வும் தூண்டப்படும். இது ஒரு சமன்பாடு. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கவிஞர் மு.பொன்னம்பலத்தின் கவிதை ஒன்று உண்டு. அதிகாரம் புரியாத சமன்பாடு என்ற அந்தக் கவிதையில்… .சர்வாதிகாரம் என்பது

விடுதலையை ஒடுக்குவதாகக் கூறிக் கொண்டு.

தன்னை அறியாமலே அதைப் பிறப்பிக்க

யோனி வாயிலில் காத்திருக்கும் மருத்துவச்சி என்றும் அது அதிகாரம் புரியாத ஒரு சமன்பாடு என்றும் மு.பொ கூறுவார்.

பொருளாதார நெருக்கடி சிங்கள மக்களை வீதிக்குக் கொண்டு வந்தது. காலி முகத்திடலில் கிராமம் அமைத்துப் போராட வைத்தது. ராஜபக்ஸக்களுக்கு வாக்களித்த மக்கள் 21 மாதங்களில் அவர்களை விரட்டினார்கள். பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி அனுர அலையை உற்பத்தி செய்தது. வெற்றியும் பெற்றது.

எனவே அலைகளை உற்பத்தி செய்வதற்கு அதற்குரிய அரசியல், சமூகப் பொருளாதாரக் காரணிகள் இருக்க வேண்டும்.கூட்டு உளவியல் இருக்க வேண்டும். தென்னிலங்கையில் ஏற்பட்ட ராஜபக்சங்களுக்கு எதிரான வெறுப்பு அலையை தேசிய மக்கள் சக்தி அனுர அலையாக மாற்றியது.

கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் வாக்களிப்பு அலைகளைக் கூட உற்பத்தி செய்ய முடித்தவைகளாக மெலிந்து வருகின்றன. தமிழ்க் கட்சிகள் அலைகளுக்காகக் காத்திருக்க போகின்றனவா? அல்லது பொருத்தமான தருணங்களில் அலைகளை உற்பத்தி செய்யப் போகின்றனவா? அல்லது அலைகள் ஓய்வதில்லை என்று கூறி பழைய பெருமைகளை இரை மீட்டுக் கொண்டிருக்கப் போகின்றனவா?

# திணறுகின்ற இலங்கையின் இராஜதந்திரம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) நண்பனாக காட்டி வந்துள்ள இலங்கை அரசாங்கம், இஸ்ரேலுடனும் ஒரு கள்ள உறவை பேணிக் கொள்கிறது. இஸ்ரேலுடன் இலங்கை இப்பொழுது வெளிப்படையான உறவுகளை பேணுவதற்கு வேறும் பல காரணங்கள் இருக்கின்றன. முன்னர் இலங்கை, இஸ்ரேலிய போர்த்தளபாடங்களை நம்பி இருந்தது.

இஸ்ரேலின் மொசாட் எனப்படும் சிறப்பு படையினரின் பயிற்சி மற்றும் ஆதரவை அது பெற்று வந்தது. இப்பொழுது இஸ்ரேல் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கிறது. இதன் மூலமாக அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதனால் இஸ்ரேலுக்கு எதிராக வாய் திறக்க முடியாத நிலையில் இலங்கை அரசாங்கம் சிக்கிப் போயுள்ளது. ஆக, உலகம் முழுவதிலும் வலுவான சக்திகள் முன்னெடுக்கின்ற ஆக்கிரமிப்பு முயற்சிகளை தடுக்க முடியாமலோ எதிர்க்க முடியாமலோ பதுங்கி இருக்க வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டு இருக்கிறது.

அதற்கு காரணம் அந்த வலுவான சக்திகளுடன் கொண்டிருக்கின்ற மூலோபாய உறவுகள் தான். இந்த தந்திரோபாய உறவுகள் நிலையானதாக இருக்க வேண்டும் என்றால் இலங்கை நடுநிலை, அணிசேரா கொள்கை போன்றவற்றை கைவிட்டு தான் ஆக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

# தையிட்டி:- காணிப் பிரச்சனையா?

வருஷம் பிறந்த பின் வந்த முதலாவது பௌர்ணமி நாளில் தையிட்டியில் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் மக்களும் நில மீட்புக்காக போராடிக் கொண்டிருந்தபோது, தமிழ்மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சியான வரை கட்சியாகவும் உருப்பட முடியாது. தமிழ்த் தேசிய அரசியலை யும் முன்னோக்கி நகர்த்த முடியாது.

இந்த முரண்பாட்டைத் தீர்க்க கட்சி க்குள்ளும் ஆளில்லை கட்சிக்கு இது காணி உரிமையாளர்களுக்கும் திஸ்ஸ விகாரையின் அதிபதிக்கும் இடையிலான ஒரு பிரச்சினை. இதில் வேறு தரப்பினர் தலையிடுவதை தவிர்க்க வேண்டும் காணி உரிமை யாளர்கள் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் தீர்வு தான் வேண்டும். அதை அரசாங் கம் ஒரு கொள்கை முடிவாக எடுக்க வேண்டும். திஸ்ஸ விகாரை விவகாரம் என்பது சட்ட நோக்கு நிலையிலும் காணி உரிமையாளர்களின் நோக்கு நிலையிலும் காணி அபகரிப்பாக இருக்கலாம். ஆனால் இங்கே அந்தக் காணியை அபகரித்து வைத்திருப்பது ஒரு விகாராதிபதி அல்ல.அவர் நன்கு நிறுவன மயப்பட்ட ஒரு கூட்டுச் செயற் பாட்டின் ஒரு கருவி மட்டுமே. அந்த விகாரைக்கு அத்திவாரம் போட்டது ராணுவத் தளபதியாக இரு ந்த சவேந்திர சில்வா அந்த விகா ரையை பகலும் இரவும் தொடர்ச்சி யாகக் கட்டியெழுப்பியது படையினர். அந்த விகாரைக்கு பாதுகாப்பு வழங்கு வது படையினரும் போலீசாரும். அந்த விகாரையின் அதிபதிக்கு அவர் சார்ந்த பௌத்த மகா சங்கம் வட பகுதிக்கான உயர் பதவியை வழங்கி யது.

எனவே இது ஒரு கூட்டுச் செயற் பாடு.கூட்டு ஆக்கிரமிப்பு. அதை அதன் அரசியல் அடர்த்திக்கூடாகச் சித்தரித்தால் அது மிகத்தெளிவான ஒரு நிலப் பறிப்பு நடவடிக்கை. மிகத் தெளிவான ஒரு சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கை. அதாவது 2009க்குப் பின்னரான ஆக்கிரமிப்பின் ஆகப்பிந்திய உதாரணம். அதிலிரு க்கும் அரசியலை நீக்கி அதைக் காணிப் பிரச்சினையாகக் காட்டுவதே ஓர் அரசியல் தான்.

எனவே அதனை அதற்குரிய அரசியல் பரிமாணத்தோடு தான் அணுக வேண்டும். காணி உரிமையாளர்களை அழைத்து அரசு அதிபர் பேசுவத



தமிழரசுக் கட்சி வவுனியாவில் கூடி உட்கட்சி முரண்பாட்டை வெளிப்படு த்தும் தீர்மானங்களை எடுத்தது. வருஷம் பிறந்த மூன்றாம் நாளில் தமிழ்த் தேசிய அரசியலின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றம் இது.

இத்தனைக்கும் தையிட்டியில் தமிழ ரசுக் கட்சிக்காரர்களும் காணப்பட் டார்கள். தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள பெரிய கட்சி அது.அதிகளவு நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருப்பது. தானே தலைமைக் கட்சி என்றும், தானே தமிழ் அரசி யலை வழி நடத்துவதாகவும் கூறிக் கொள்கிறது. கருதிக் கொள்கிறது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டு களுக்கு மேலாக உட்பகையைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஒரு கட்சி.

தொடர்ந்தும் பதில் தலைவரின் கீழும் பதில் செயலாளரின் கீழும் இயங்கு வதை ஒரு தோல்வியாகச் சுட்டிக் காட்டக் கூடிய மூத்த கட்சி உறுப் பினர்களும் இல்லை.மூத்த ஆதர வாளர்களும் இல்லை. மதத்தலை வர்களாலோ அல்லது சிவில் சமூகத் தலைவர்களாலோ யாராலுமே தீர்க்க முடியாத ஒரு முரண்பாடாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கட்சி தானே தனக்குள் இரண்டாகப் பிளந்து நிற்கிறது. ஏதாவது ஓர் அணி பலமடைந்து கட்சித் தலை மையை முழுமையாக தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தால் தவிர கட்சி தொடர்ந்து சிதைந்து கொண்டே போகும் நிலைமைகள் தான் அதிகரிக்கின்றன.

கட்சிக்குள் காணப்படும் இரண்டு அணிகளும் சமூக வலைத்தளங்களில் முகமூடி அணிந்து கொண்டு ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்குகிறார்கள். ஒருவர் மற்றவரை மதிப்பிறக்கம் செய்கிறார்கள்.ஒருவர் மற்றவரை சுற்றி வளைக்கும் முற்படுகிறார்கள். தமிழ ரசுக் கட்சியின் வரலாற்றில் அது அதிகம் சீரழிந்த ஒரு காலகட்டமாக இதைக் கூறலாமா? இதை அறிவுப் பூர்வமாக அணுகத்தக்க ஒருவருமே கட்சிக்குள் இல்லையா? இந்த முரண் பாட்டை அறிவுபுர்வமாக அணுகினால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். கட்சி தனக்குள் இரண்டுபட்டிருக்கும் வெளியேயும் ஆள் இல்லை என்பது தமிழ்த் தேசிய அரசியலின் வீழ்ச்சியைக் காட்டுகிறது. இப்படிப்பட்டதோர் பாரதூரமான சீரழிவின் பின்னணியில் தையிட்டி போன்ற போராட்டக் களங் களில் உறுதியாக முன்னோக்கிச் செல்ல முடியுமா? ஒவ்வொரு பௌர்ணமி நாளும் போராடி காணிகளை மீட்க முடியுமா? இரண்டு பௌர்ணமிகளு க்கு இடையில் அரசாங்கம் தன்னை சுதாகரித்துக் கொண்டு விடும்.

நிரல்களின் பிரகாரம் செயல்படாது பொறுமை காக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

கடந்த ஆண்டின் முடிவில் யாழ் அரச அதிபருக்கும் காணி உரிமையாளர் களுக்கும் இடையில் நடந்த சந்திப்பும் அந்த அடிப்படையிலானது தான். தமிழ்ப் பகுதிகளில் உள்ள முக்கியத் துவம் மிக்க ,நயினாதீவு விகாரையின் அதிபதி தமிழ் மக்களின் பக்கம் நின்று கதைத்தாலும், அவரும் கூட இந்த விடயத்தை காணிப் பிரச்சனையாகத் தான் சுருக்குகிறார். திஸ்ஸ விகாரை யின் அதிபதி அதனை முழுக்க முழுக்க காணிப் பிரச்சினையாகவே குறுக்குகிறார்.

ஆனால் திஸ்ஸ விகாரை விவகாரம் ஒரு காணிப்பிரச்சினை மட்டுமல்ல. சட்டப்பிரச்சினை மட்டுமல்ல. அது அதைவிட ஆழமான பொருளில் ஓர்

னாலோ அல்லது அரசு அதிபரும் காணி உரிமையாளர்களும் விகாரதிபதி களும் பேசுவதனாலோ இந்தப் பிரச்சினை தீர்த்து விடாது. அதற்கு அரசியல் தீர்வு வேண்டும். இப்போது ள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப்பிரச்சினை இல்லை என்று கூறுகிறது. தான் இனவாதத்துக்குத் தலைமை தாங்கவில்லை என்று கூறு கிறது. ஆனால் தையிட்டியில் நடப் பது சிங்கள பௌத்த மயமாக்கல் தான். இனவாத நடவடிக்கை தான்.




அரசாங்கம் தமிழ்த் தேசிய அரசியலின் பலவீனத்தை நன்கு விளங்கி வைத் திருக்கிறது. அதனால் தான் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தை ஒரு காணிப் பிரச்சனையாக அது குறுக்கப் பார்க்கிறது. கடந்த பௌர்ணமி நாள் போராட்டத்தின் பின் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சரும் சட்டத் தரணிமான ஹர்ஷண நாணயக்கார.

# ஹருணிக்கு ஆதரவாக தமிழ்த்தேசியக் கட்சிகள்!

பிரதமர் ஹருணி மீதான தாக்குதல்கள் முதலாவதாக கட்சி அரசியல் வகைப்பட்டவை. இரண்டாவதாக, பண்பாட்டு வகைப்பட்டவை. மூன்றாவதாக பெண்களுக்கும் பாலியல் சிறுபான்மையினருக்கும் (LGBTQ) எதிரானவை.

ஜேவிபியை தேசிய மக்கள் சக்தியாக வெளி உலகத்துக்கு அறிமுகப்படுத்தியதில் ஹரிணிக்குப் பெரிய பங்குண்டு. தேசிய மக்கள் சக்தியின் பிரகாசமான லிபரல் முகமாக அவர் தான் வெளியே தெரிய வந்தார். அதனால் அவருக்கு இரண்டு முனைகளில் எதிர்ப்பு இருந்தது.

முதலாவது முனை, அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே உண்டு. கட்சியின் அடித்தளமாக இருக்கும் ஜேவிபியின் கடும்போக்காளர்கள் அவருடைய பிரபல்யத்தையும் எழுச்சியையும் ரசிக்கவில்லை. அவர்கள் அவருடைய இடத்துக்கு ஒரு ஜேவிபியின் கடும்போக்கு உறுப்பினரை அமர்த்துவதற்கு விரும்புகிறார்கள்.

இரண்டாவது முனை எதிர்க்கட்சிகள். நுகேகொட ஆர்ப்பாட்டத்தின் பின் எதிர்க்கட்சிகள் கொஞ்சம் தலையைத் தூக்கலாம் என்ற நம்பத் தொடங்கின. ஆனால் புயல் வந்து அரசாங்கத்தை எதிர்பார்த்ததை விட அதிகமாகப் பலப்படுத்தி விட்டது. இதனால் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராகத் தலையெடுப்பதற்கு வாய்ப்புகளுக்காகக் காத்திருந்தன.

ஆறாம் ஆண்டு ஆங்கில பாடக் கையேட்டில் காணப்பட்ட இணையத் தொடுப்பு ஒரு தவறு தான். அது பாடசாலைகளால் பயன்படுத்தப்பட முன் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு தவறு. எனவே அதைச் சரி செய்யலாம். கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் ஹரிணி அதனை வேண்டுமென்று செய்திருப்பார் என்று கருதத்தக்க ஓர் இறந்த காலம் அவருக்கு இல்லை. ஆனால் அந்த இணையத் தொடுப்பு தன்பாலுறவு சம்பந்தப்பட்டது என்பதை வைத்து ஹரிணியை தாக்குவதற்கு எதிர்க்கட்சிகள் அந்த விவகாரத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன.

ஹரிணி திருமணம் செய்யாதவர் என்பதை வைத்தும், அவருடைய பெண்ணிய நிலைப்பாடுகளை வைத்தும் அவர் பாலியல் சிறுபான்மையினரின் உரிமைகளைப்(LGBTQ) பாதுகாப்பவர் என்ற அடிப்படையிலும், அவரை ஒரு லெஸ்பியன் என்று முத்திரை குத்தி எதிர்க்கட்சிகளும் அவரைப் பிடிக்காதவர்களும் அவருக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

இது போன்ற ஒரு பாலினச் சேர்க்கை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ரணில் விக்ரமசிங்க, மங்கள சமரவீர, பண்டாரநாயக்க முதலாய் பல ஆண் தலைவர்கள் மீது ஏற்கனவே இருந்த ஒன்று தான். ஆனால் ஹரிணி ஒரு பெண் என்பதனாலும், அவர் திருமணம் செய்யவில்லை என்பதை முன்வைத்தும் அவருடைய ஆடைகள் பொது வெளியில் பெருமளவுக்கு சிங்கள பௌத்த பண்பாட்டை பிரதிபலிக்கவில்லை என்பதை வைத்தும் அவர் மீதான தாக்குதல்கள் வக்கிரமானவைகளாகவும் விகாரமானவைகளாகவும் காணப்படுகின்றன.

உங்களுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையை ஏற்பாடு செய்து தருகிறேன். கல்யாணம் செய்து பிள்ளை குட்டிகள் பெற்று வாழுங்கள் என்று கூறுகிறார் பத்தரமுல்லே சீலரத்ன தேரர். பெண்கள் திருமணம் செய்யாமல் வாழக் கூடாது என்று அவர் கூறுகிறார்.

ஹரிணி கண்டிச் சிங்கள பௌத்த சமூகக் கட்டமைப்புக்குள் இருந்து வந்தவர் அல்ல. ஆனால் மிகப்பலமான செல்வாக்கான குடும்பப் பின்னணியை கொண்டவர். அவருடைய ஆடைத் தெரிவுகளும் சிங்கள பௌத்த பாரம்பரியத்தை பெருமளவுக்கு பிரதிபலிக்கவில்லை. இதுவும் சிங்கள பௌத்த கடும் போக்காளர்களின் கண்ணை உறுத்துகிறது.

எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு உணர்ச்சிகரமான விடையப் பரப்புகள் தேவை.குறிப்பாக



பண்பாடு சார்ந்த, மதம் சார்ந்த,பாலுறவு சார்ந்த விமர்சனங்களை கையில் எடுத்தால் அவை சிங்கள பௌத்த கூட்டு உளவியலில் அதிகம் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஹரிணி மீதான தாக்குதல் ஒரு விதத்தில் எதிர்க்கட்சிகளின் இயலாமையைக் காட்டுகிறது.

இத்தனைக்கும் ஹரிணியோ அல்லது அவர் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் சக்தியோ இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த நம்பிக்கைகளை தலைகீழாகப் புரட்டிப்போடும் விதத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் எதையும் இதுவரை முன்னெடுத்திருக்கவில்லை.

தன் மீதான சர்ச்சைகளின் பின்னணியில் சில நாட்களுக்கு முன்பு ஹரிணி மகா நாயக்கர்களை சந்தித்தார். மகா நாயக்கர்களை ஹரிணி சந்திப்பதற்கு சில நாட்களுக்கு முன் அனுர சந்தித்தார். அவரும் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாக மகா நாயக்கர்களுக்கு விளக்கம் அளித்தார்.

அதாவது மகா நாயக்கர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய ஒரு நிலையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியும் பிரதமரும் காணப்படுகிறார்கள் என்று பொருள். அப்படியென்றால் அவர்கள் சிங்கள பௌத்த அரச கட்டமைப்பின் வழமைகளை புரட்சிகரமான விதங்களில் மீறவில்லை என்று பொருள்.

ஹரிணி கல்வி அமைச்சராக இருக்கிறார். ஆனால் அவர் கொண்டுவரும் கல்வி மறுசீரமைப்புக்குள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நீக்கப்படவில்லை. சின்னப் பிள்ளைகளை, 10 வயதுப் பிள்ளைகளை சித்திரவதை செய்யும் ஒரு பரீட்சையை அகற்ற வேண்டும் என்று எல்லாக் கல்வி உளவியலாளர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் மாற்றத்தை வாக்களித்து வந்த இந்த அரசாங்கம், சின்னப் பிள்ளைகளின் உளவியலைப் பாதிக்கும் அந்த விடயத்தில் மாற்றங்களைச் செய்யத் தயங்குகிறது. இந்த ஓர் உதாரணமே போதும் இந்த அரசாங்கம் எதுவரை மாற்றங்களைச் செய்யலாம் என்பதற்கு.

அடுத்தது பெண்ணிய நோக்கு நிலையில் இருந்து ஓர் உதாரணம். கல்வி அமைச்சின் கீழ்வரும், நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பெண்கள் பண்பாட்டு உடுப்புகளையே உடுக்க வேண்டும் என்று கண்டிப்பான ஒரு நடைமுறை பல தசாப்தங்களாக பின்பற்றப்பட்டு வருகிறது. தனிமனித உரிமைகளை பெண்ணுரிமைகளை நிராகரிக்கும் இந்த விடயத்தில், பெண் ஆசிரியர்கள் தங்களுக்கு விருப்பமான ஆடைகளை அணிவதற்கு கல்வி அமைச்சும் அனுமதிக்கவில்லை மகா சங்கமும் அனுமதிக்கவில்லை.

ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டுபவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் தமது ஆடைத் தெரிவில் பண்பாட்டின் முன் உதாரணங்களாக அமைய வேண்டும் என்று கல்வி அமைச்சும் மகா சங்கமும் கூறுகின்றன. அப்படி ஆசிரியர்கள் பண்பாட்டு அடைகளத் தான் உடுக்க வேண்டும் என்று சொன்னால், அது ஆண் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் பெண் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஆனால் நாட்டில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலான ஆண் ஆசிரியர்கள் பண்பாட்டு உடுப்புகளை அணிவதில்லை. அவர்கள் மேற்கத்திய சேர்ட்டையும் நீளக் காற் சட்டைகளையும்தான் அணிகிறார்கள். ஆனால் பெண் ஆசிரியர்களை மட்டும் பண்பாட்டின் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இங்கே அறிவுக்குப் பொருந்தாத பால் அசமத்துவம் உண்டு. பிள்ளைகளுக்கு கல்வியூட்டி விழுமியங்களைக் கற்பிக்கும் கல்விக் கட்டமைப்புக்குள்ளேயே அறிவுக ்கொவ்வாத பால் அசமத்துவம் உண்டு. ஆயின், சமூக அசமத்துவம் தொடர்பில் இலங்கைத் தீவின் கல்விக் கட்டமைப்பு பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முன்னுதாரணம் எது?

ஹரிணி கல்வி அமைச்சராக வந்த பின்னரும் பெண் ஆசிரியர்கள் பண்பாட்டின் காவிகளாகத்தான் இருக்கிறார்கள். அதில் சிறு மாற்றத்தைக் கூடச் செய்ய அவரால் முடியவில்லை. எனவே ஹரிணியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ சிங்கள பௌத்த பண்பாட்டை புரட்சிகரமான விதங்களில் மாற்றுவார்கள் என்று நம்பத்தக்கதாக கடந்த 15 மாதகால அவர்களுடைய ஆட்சி அமையவில்லை.

ஆனால் எதிர்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிப்பதற்கு வேறு வழி இல்லை என்பதனால் ஹரிணியை மையப்படுத்தி தாக்குதலைத் தொடங்கியிருக்கின்றன. அவர் ஒரு பெண் என்பதனாலும் ஜேவிபியை தேசிய மக்கள் சக்தியாக உருமாற்றுவதில் அதிகம் பங்காற்றியவர் என்பதனாலும் அவர் வக்கிரமாகத் தாக்கப்படுகிறார்.

இத்தாக்குதலில் முன்னணியில் நிற்கும் பிக்குக்கள் எத்தனை பேர் ஹரிணியை விமர்சிக்கும் தகுதி உடையவர்கள்? ஹரிணியின் ஆடையை விமர்சிக்கும் பௌத்த பிக்குகள் பலர் அணியும் காவிக்கு அவர்களே முன்னுதாரணங்களாக இல்லை. சிங்கள பௌத்த மதகுருக்களின் காவிக்குள் சாதி உண்டு. அதை விட, காவி என்பது பற்றின்மையின் உடுப்பு. காவியை அணிந்திருக்கும் எத்தனை பிக்குகள் அவ்வாறு முற்றும் துறந்த சன்னியாசிகளாக இருக்கிறார்கள்? சன்னியாசிகளைப் போலவா அவர்கள் கதைக்கிறார்கள்?

ஹரிணிக்கு எதிரான வன்மம் மிகுந்த அவதூறுகளை எதிர்த்து 58 பேர் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அரசியல்வாதிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள்.அவர்களுக்குள் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் உண்டு. தமிழரசுக் கட்சியின் சுமந்திரனும் உண்டு.

கஜேந்திரக்குமாரும் ஹரிணி மீதான வன்மமான விமர்சனங்களைக் கண்டித்திருக்கிறார். ஹரிணியின் அரசியல் மீது தனக்கு உடன்பாடு இல்லை என்ற போதிலும் அவர் மீதான, அவதூறுப் பிரச்சாரங்களை தான் எதிர்ப்பதாக கஜன் சமூக வலைத் தளங்களில் பதிவிட்டு இருக்கிறார்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளின் முக்கியஸ்தர்கள் அவ்வாறு ஹரிணிக்கு எதிரான விமர்சனங்களை எதிர்த்திருப்பது என்பது ஒரு முக்கியமான விடயம். ஹரிணி மீதான தாக்குதல்களில் முன்னணியில் நிற்பவர்கள் பெரும்பாலும் சிங்கள பௌத்த கடும் போக்காளர்களே. பழமைவாதிகளே இக்கடும் போக்காளர்களுக்கு எதிராக தமிழ்ப் பரப்பில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்திருப்பது ஒரு நல்ல மாற்றம். ஹரிணியை அகற்றி ஒரு கடும் போக்குள்ள ஜேவிபி உறுப்பினரை அவருடைய இடத்துக்கு நியமிக்க வேண்டும் என்று உள்ளூர விரும்பும் ஜேவிபிக் காரர்களுக்கும் அங்கே ஒரு செய்தி இருக்கிறது.



# வெனிசுலா:- 21ம் நூற்றாண்டின் சோஷலிச விளைநிலம்!

கட்டுரையாளர்:-
– அழகு குணசீலன் –

அது என்ன புதுக்கதை....! 21ம் நூற்றாண்டின் சோஷலிசம் என்று நீங்கள் புறு புறுப்பது கேட்கிறது.

கார்ள் மார்க்ஸ் காலத்து முதலாளித்துவம் அல்ல இன்றைய முதலாளித்துவம். அது தன்னை வளைத்தும், நெளித்தும், சுருக்கியும், விரித்தும், உள்ளடக்கத்தை உருமாற்றம் செய்தும் மார்க்ஸ் கூறிய முதலாளித்துவ முடிவில் இருந்து தன்னை தப்பித்துக் கொண்டுள்ளது.

எனவே அதனை பழைய அணுகுமுறையினூடாக மட்டும் எதிர்கொள்ள முடியாது. அதற்கு பொருத்தமான மாற்று சமூக, பொருளாதார, அரசியல் தந்திரோபாயங்களை கொண்ட சோஷலிச அணுகுமுறை தேவை. அதனையே நவீன அரசியல் ஆய்வாளர்கள் 21ம் நூற்றாண்டின் சோஷலிசம் என்று அழைக்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியமும், பல்தேசிய கம்பனிகளும் மனித குலத்திற்கு பெரும் சவால் விடுகின்ற இக்காலத்தில் சோஷலிசத்தின் கடமையும், பொறுப்பும், செயற்றிறனும் புதிய வடிவில் பங்காற்ற வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது என்ற 21ம் நூற்றாண்டின் சோஷலிசத்தின் தேவை குறித்த அறிஞர்களின் கருத்துக்கு வெனிசுவேலா அதிபர் நிக்கலஸ் மதுரோவின் கடத்தல் வலுச்சேர்திருக்கிறது.

21ம் நூற்றாண்டின் சோஷலிசம் பற்றி பேசுவதால் 20ம்நூற்றாண்டின் சோஷலிச தத்துவங்கள் தோற்று விட்டனவா? அல்லது செயலிழந்த விட்டனவா? என்று யாரும் தயவு செய்து சண்டைக்கு வரவேண்டாம்.

முதலாளித்துவம் சமூக நலன் சார்ந்த பல சோஷலிசக் கருத்துக்களை திருடி அவற்றை முதலாளித்துவ கருத்தியலாக சோடித்து கொண்டு, காலனித்துவ, கைத்தொழில் புரட்சி காலத்தையும் விடவும் வீறு கொண்டு எழுகிறது.

சர்வதேச, தேசிய, பிராந்திய பூகோள, சமூக, பொருளாதார, அரசியல் தேவைகளுக்காக வறிய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவும் இதற்கு பின்னால் ஓடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது .

டிஜிட்டல் உலகம், உலகமயமாக்கல், தாராள வர்தகம் என்ற மயக்கத்தில் இந்த நாடுகள் உள்ளன.

இந்த நிலையில் 21ம் நூற்றாண்டின் சமகால தேவைகளுக்காக மார்க்சிய அடிப்படைகளை மேலும் வலுவாக்க சில மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன.

நாம் இன்று பேசுகின்ற பின்நவீனத்துவ அணுகுமுறை கூட இந்த மாற்றத்தின் ஒரு விரிவு- விளைவு.

இன்னொரு வகையில் சொல்வதானால் 21ம் நூற்றாண்டின் சோஷலிசம் என்பது நவீன உலகில் முதலாளித்துவம் ஏற்படுத்துகின்ற சவால்களுக்கு எதிரான செயற்றிட்டம்.

முதலாளித்துவம் தனது இலாப இலக்கை அடைய தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டும் வழி முறைகளை மாற்றியுள்ளது.

இதை தொழிலாளர்களின் கூலிமட்டம், முதலாளிகளின் மிகை இலாபம் என்பனவற்றிற்கு அப்பால் நோக்க வேண்டிய தேவை உள்ளது.

முதலாளித்துவத்தின் நெருக்கடியாக காலநிலை மாற்றம், சுற்றாடல் பாதுகாப்பு, சமூக ஏற்றத்தாழ்வு, உலகமயமாக்கம் போன்றவை விரிவடைந்துள்ளன. இதனால் இவற்றை 20ம் நூற்றாண்டு சோஷலிசம் முற்றாக பேசவில்லை என்பதல்ல. இன்றைய பூகோள சமூக, பொருளாதார, அரசியலில் இவற்றை மேலும் செதுக்க வேண்டிய தேவையுள்ளது.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்பனவற்றிற்கு எதிராக இந்த புதிய பாதையில் முதல் பயணத்தை 21ம் நூற்றாண்டில் தென்னமெரிக்கா ஆரம்பித்தது. அதற்கு வெனிசுவேலா அதிபர் HUGO CHAVEZ தலைமைத்துவம் வழங்கினார். NICOLAS MADURO அதை தொடர்ந்தார். இரு முரண்பட்ட சக்திகளான முதலாளித்துவமும், 21ம்நூற்றாண்டின் சோஷலிசமும் சந்தித்த இந்த மோதல் புள்ளியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் மதுரோ கடத்தப் பட்டார். இந்த காட்சியைத் தான் உலகம் இன்று தரிசிக்கின்றது.

சுயாதிக்கமும், இறைமையும் கொண்ட வெனிசுவேலாவின், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியை அனைத்து சர்வதேச சட்டங்களையும், நியாதிக்கங்களையும் மீறி துஷ்பிரயோகம் செய்து மதுரோவை அமெரிக்கா கடத்தியுள்ளது.

போதைப்பொருள் ஏற்றுமதியாளர், சர்வாதிகாரி, மனித உரிமைகளை மீறியவர், தேர்தலில் குளறுபடி செய்தவர் என்று சர்வதேச குற்றவாளியாக உலகிற்கு காட்டி ஒரு இறைமையுள்ள நாட்டின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பை அத்துமீறல் இராணுவ நடவடிக்கைகையை அமெரிக்கா நியாயப்படுத்துகிறது.

இந்த இடத்தில் அமெரிக்க குடியரசுக் கட்சியினரும், ஜனாதிபதி ட்ரம்ப்பும் அவர்களின் கடந்த இரண்டு ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் செய்ததை விடவும் மதுரோ ஒப்பீட்டளவில் எதையும் அதிகமாகச் செய்யவில்லை. அப்படி செய்திருந்தாலும் அதற்கு ஜனநாயக ரீதியாக தண்டனை வழங்க வேண்டியவர்கள் வெனிசுவேலா மக்களே.

அத்துடன் அமெரிக்க மக்களின் ஜனநாயக ரீதியான தேர்தல் முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்து கப்பிட்டலை எரித்தவர்களுக்கு வெனிசுவேலாவின் ஜனநாயகம் பற்றி பேச இருக்கின்ற யோக்கியதை என்ன?.

போதைப்பொருள் நெருக்கடி, பொருளாதாரப் பிரச்சினைகள், அமெரிக்க கல்வி, சுகாதாரத்துறைகளில் ஏற்படும் வீழ்ச்சி, இராணுவத்தை தவிர வேறு இடங்களில் வேலை வாய்ப்பு இன்மை, நியூ யோர்க் வீதிகளில் பிச்சை எடுத்தல், பாலியல் தொழில், வீதியோரங்களில், வசிக்கும் குடியேற்றவாசிகள் என்பன எல்லாம் முதலாளித்துவ பொருளாதாரத்தின் தோல்விகள், சமூக, பொருளாதார, அரசியலை மதிப்பிடும் குறிகாட்டிகள்.

இவற்றுக்கு எல்லாம் தென்னமெரிக்க இடதுசாரி தலைமைகளை குற்றம் சாட்டி தப்பிக்கொள்ள முயலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடாவடித்தனம் தான் மதுரோவின் கடத்தல்.

வெனிசுவேலா ஜனாதிபதிகளான குகோ சவேர்ஸ், மதுரோ ஆகியோர், கியூபாத் தலைசர் காஸ்ட்ரோவிற்கு பிறகு அமெரிக்கத் தலைவர்களுக்கு சிம்ம சொற்பனமாக இருந்தார்கள். பொலிவியா, மெக்சிக்கோ, பிரேசிலிலும் அமெரிக்காவுக்கு எதிரான இந்த நிலைப்பாட்டை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

இந்த நிலையில் தென்னமெரிக்க நாடுகளுக்கு சாவேர்ஸ்க்கு பின்னர் ஒரு தலைமைத்துவத்தையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், மேற்குலகிற்கும் எதிரான கூட்டுக்களை அமைப்பிலும், பூகோள அரசியலில் இராஜதந்திர அணுகுமுறைகளை வகுப்பதிலும் மதுரோவின் பங்களிப்பு அபாரமானது. இதனை ஜனநாயக அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாத அமெரிக்கத் தலைமை மதுரோவை கடத்தியுள்ளது.

அமெரிக்க கட்டுப்பாட்டில் உள்ள சர்வதேச நிறுவனங்களின் சட்டங்கள், வரைவிலக்கணங்களுக்கு அப்பால் மதுரோ மீதான அமெரிக்க நடவடிக்கை ஒரு கடத்தல், ஊடகங்கள் பலவும் மதுரோவின் கடத்தலை கைது (ARREST) கைப்பற்றல் (CAPTURE) நாடுகடத்தல் (DEPORTATION) என வாய்க்கு வந்த மாதிரி சொல்லியும், எழுதியும் தமது ஏகாதிபத்திய மேற்குலக விசுவாசத்தை வெளிப்படுத்திவருகின்றன.

சர்வதேச வரைவிலக்கணங்கள் எதுவாக இருப்பினும் இறைமையுள்ள நாடொன்றுக்குள், அத்துமீறி நுழைந்து அமெரிக்க இராணுவம் மதுரோவை கடத்தியது ஒரு சர்வதேச குற்றச்செயல் என்பதே மூன்றாவது கண்ணின் நிலைப்பாடு.

வெனிசுவேலா அதிபர் நிக்கலஸ் மதுரோ ஏன் கடத்தப்பட்டார்? ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று 21ம் நூற்றாண்டின் சோஷலிச வளர்சியை எதிர் கொள்வது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு(22ம் பக்கம் பார்க்க)

# திணறுகின்ற இலங்கையின் இராஜதந்திரம்!

வெனிசுவேலா மீது அமெரிக்கா முன்னெடுத்துள்ள நடவடிக்கை தனியே அந்த நாட்டில் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதன்று. உலகம் முழுவதும் அதன் தாக்கம் எதிரொலிக்கப் போகிறது.

ஏனென்றால் வெனிசுவேலாவின் எண்ணெய் வளம் அத்தகையது. இது நிகோலஸ் மதுரோ சார்ந்த ஒரு பிரச்சினை அல்ல. அதற்கு முன்னர்



ஹியூகோ சாவேஸ் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இருந்து நீடித்த பிரச்சினை. வெனிசுவேலாவில் உள்ள எண்ணெய் வளத்தை கைப்பற்றுவது அமெரிக்காவின் இலக்கு. அதன் ஊடாக அமெரிக்கா தனது பல்வேறு இலக்குகளை அடைய முற்படுகிறது.

வெனிசுவேலா தனது தன்னிடம் உள்ள எண்ணெயை மிகக் குறைந்த விலைக்கு மக்களுக்கு விற்று வரும் நாடு.

உலகில் மிகக் குறைந்த விலையில் எரிபொருளை விற்கின்ற நாடு அது. இப்போதைய புள்ளி விவரங்களின்படி, 0.035 டொலர்களுக்கு ஒரு லீற்றர் எரிபொருளை அந்த நாடு விற்பனை செய்கிறது. இது கிட்டத்தட்ட 11 இலங்கை ரூபா ஆகும்.

இலங்கையை விட 30 மடங்கு குறைந்த விலையில் எரிபொருளை விற்கிறது வெனிசுவேலா. வெனிசுவேலாவில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை, இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொருளாதார ரீதியாக, எரிபொருள் விநியோக சங்கிலியில் உடைவு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உலக சந்தையில் எரிபொருள் விலையை அதிகரிக்கச் செய்யும் என்ற கணிப்புகள் உள்ளன.

அதேவேளை வெனிசுவேலாவின் எண்ணெய் வளர்த்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால், எண்ணெய் விலையை தீர்மானிக்கின்ற நாடாக மாறும். அதுவும் சிக்கலை ஏற்படுத்தும்.

வெனிசுவேலா மசகு எண்ணெயை விற்க சர்வதேச தடை உள்ளதால், அந்த நாட்டின் 50 மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெயை அமெரிக்கா எடுத்து, சந்தைப்படுத்தி அந்த நிதியை தனது பொறுப்பில் வைத்திருக்கப் போவதாக ட்ரம்ப் கூறுகிறார். இதையே இந்தியா செய்கின்ற போது அவருக்கு கோபம் வருகிறது.

ரஷ்யாவின் எண்ணெய் வர்த்தகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும், அதனை மீறி இந்தியா கொள்வனவு செய்கிறது.

தனது தேவைக்கும் அதிகமாக கொள்வனவு செய்து இந்திய அதனை ஏற்றுமதி செய்கிறது.

ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்தா விட்டால் இந்தியா மீது வரிகளை விதிக்கப் போவதாக ட்ரம்ப் இப்போதும் அச்சுறுத்தி வருகிறார்.

வெனிசுவேலாவின் எண்ணெயை அமெரிக்கா விற்பனை செய்யத் தொடங்கினால் இலங்கைக்கு தலை வலி ஏற்படும். அந்த எரிபொருளை வாங்குமாறு இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தங்களை கொடுத்தாலும் ஆச்சரியம் இல்லை.

ஏற்கெனவே வர்த்தக இடைவெளியை குறைப்பதற்கு அமெரிக்க பொருட்களை கூடுதலாக இறக்குமதி செய்ய வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது.

அவ்வாறு இறக்குமதி செய்ய வலியுறுத்தப்படும் பொருட்களில் எரிபொருள் மற்றும் எரிவாயுவும் அடங்கியிருந்தது. ஆனால் அது விலை அதிகம் என்பதால், இலங்கை அதற்கு தயங்கி வருகிறது.

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை எண்ணெய் கேந்திரமாக மாற்றுவதற்கு ஒரு உடன்பாட்டை இலங்கை செய்திருக்கிறது.

அது போல அம்பாந்தோட்டையில் 3.7 பில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்க சீனாவுடனும் இலங்கை உடன்பாடு செய்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் வெனிசுவேலாவின் எரிபொருளை அமெரிக்கா தன்னிடம் இருந்து வாங்க வேண்டும் என அழுத்தம் கொடுத்தால் இலங்கை நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும்.

இன்னொரு புறத்தில், சர்வதேச ரீதியில் இலங்கைக்கு ஆதரவாக நின்ற நாடு வெனிசுவேலா. சாவேஸ் ஜனாதிபதியாக இருந்த போது, மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவருக்கும் நெருங்கிய உறவு இருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச அரங்குகளில், இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்ட போது கியூபா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் வெனிசுவேலாவும் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்தன என்பதை மறுக்க முடியாது.

இந்த நிலையில் இலங்கை இப்போது நெருக்கமானஒரு சர்வதேச இடதுசாரி கூட்டாளியை இழக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் வெனிசுவேலா ஒரு இடதுசாரி நாடாக இருக்குமா இருக்க முடியுமா என்பது கேள்விக்குறி. அது அமெரிக்காவின் கைக்குள் சிக்கிக் கொள்ளுமேயானால் அது சுயாதீனமாக இயங்க முடியாமல் போகலாம்.

எதிர்காலத்தில் ஐ.நா .மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு சிக்கல் ஏற்படும் போது, வெனிசுவேலாவின் ஆதரவை பெற முடியாமலும் போகக் கூடும்.

இது இலங்கைக்கு சர்வதேச அளவில் ஒரு நெருக்கடியான சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா விடயத்தில் மாத்திரமல்ல, அதற்கு அப்பாலும் இந்தச் சிக்கல் நீடிக்கிறது.

வெனிசுவேலாவுடன் நீண்ட கால நட்புறவைக் கொண்டிருக்கின்ற இலங்கை, அதனுடன் இணைந்து நிற்கக் கூடிய நிலை இன்று இல்லை.

பகிரங்கமாக அமெரிக்காவை கண்டிக்கின்ற சூழல் கூட இல்லாமல் போயிருக்கிறது. அதற்கான திராணி அரசாங்கத்திடம் இல்லை. அமெரிக்கா வெனிசுவேலா விடயத்தில் மாத்திரம் இந்த நிலை என்றில்லை.

இது போன்ற பல சிக்கல்களை இலங்கையின் ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்கில் எதிர்கொள்கிறார்கள். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு இருக்கிறது.

இரண்டு நாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நெருக்கமாக செயல்பட்டு வருகின்றன. போர்க்காலத்தில் இலங்கைக்கு தேவையான ஆயுதங்களையும் பயிற்சிகளையும் பாகிஸ்தான் வழங்கியது. ஆனால் இலங்கையினால், முற்று முழுதாக பாகிஸ்தானுடன் நின்று பிடிக்கக் கூடிய சூழல் இன்று இல்லை.

காரணம், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண் நிலை தீவிரம் அடைந்திருக்கிறது.. இரண்டு தரப்பும் இனி ஒட்ட முடியாதளவுக்கு எட்ட நிற்கின்றன.

இவ்வாறான நிலையில், இலங்கையிடம் இருந்து பாகிஸ்தானைத் தள்ளி வைப்பதற்கு இந்தியா பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவது, இரகசியமான விடயம் அல்ல.

இது இலங்கைக்கு ஒரு சிக்கலான சூழல், தர்மசங்கடமான நிலை எனலாம்.

பாகிஸ்தானையும் சமாளித்து இந்தியாவையும் அனுசரித்துப் போக வேண்டிய நிலை இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு உள்ளது.


உக்ரேன் – ரஷ்யா பிரச்சினையிலும் இதே சிக்கல் தான். உக்ரேனுடன் இலங்கை நெருங்கிய உறவுகளை வைத்திருந்தது. போர்க்காலத்தில் உக்ரேன் பல்வேறு போர்த்தளவாடங்களை இலங்கைக்கு வழங்கியது.

அந்த நாட்டின் விமானிகள் இலங்கை படையினருக்கு பயிற்சிகளை அளித்தனர். குண்டு வீச்சுக்களிலும் ஈடுபட்டனர். அவர்களில் சிலர் போரின் போது மரணமும் அடைந்தார்கள்.

உக்ரேன் மீது ரஷ்யா படையெடுத்த போது இலங்கையில் அதற்கு எதிர்ப்புகள் கிளம்பின.

கொழும்பில் ரஷ்ய தூதரகம் முன்பாக உக்ரேனியர்கள் போராட்டங்களை


கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

நடத்தினார்கள். ஆரம்பத்தில் இலங்கை ஆட்சியாளர்களும் அதற்கு ஆதரவளித்தது போலக் காணப்பட்டாலும், காலப்போக்கில் ரஷ்யாவின் அழுத்தங்களினால் உக்ரேனை கைவிடும் நிலைக்கு இலங்கை வந்து விட்டது.

இப்பொழுது உக்ரேனுடன் பெரியளவில் தொடர்புகளை பேணுவதில்லை. உக்ரேனிலிருந்து இலங்கை விலகியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

காரணம், ரஷ்யாவிடம் இருந்து இலங்கைக்கு இன்னமும் பொருளாதார நலன்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவில் இருந்து வருகின்ற சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு முக்கியமானவர்கள்.

இந்த எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அதனால் பொருளாதார நலன்களை மையப்படுத்தி உக்ரேன் மீதான ரஷ்யாவின் நடவடிக்கை தொடர்பாக அமைதியாக இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது.

இந்த இடத்திலும் இலங்கையின் நடுநிலை வெளிப்படவில்லை. அது இரண்டு தரப்புக்கும் இடையில் திணறிக் கொண்டிருக்கும் நிலையிலேயே இருக்கிறது.

அதே போன்று சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான பிரச்சினையிலும் கூட இந்த சிக்கல் நீடித்திருக்கிறது

இலங்கைக்கான உதவிகளை வழங்குவதற்கு முன்னர், தாய்வான் தொடர்பான விவகாரத்தில் இலங்கையின் தெளிவான நிலைப்பாட்டை சீனா உறுதி செய்கிறது. ஒரே சீனா என்ற கொள்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்துமாறு அது வலியுறுத்துகிறது.

இது ஒரு சிக்கலான சூழல். தாய்வானின் மீதான எந்த ஒரு நடவடிக்கையும் சீனா மேற்கொண்டாலும், அதனை கண்டிக்க முடியாத நிலையிலே இலங்கை இருக்கும்.

ஏனென்றால் இலங்கைக்கு தாய்வானை விட, சீனா முக்கியமானது.

இப்பொழுது ட்ரம்பின் நடவடிக்கை மீது இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்த முடியாமல் இருப்பது போல, மதுரோவின் கடத்தலுக்கு எதிராக குரல் கொடுக்க முடியாமல் இருப்பது போலத்தான் தாய்வான் மீதான சீனாவின் நடவடிக்கையின் போதும் இருக்கும்.

பலஸ்தீனர்களுக்கு நெருக்கமான (15ம் பக்கம் பார்க்க)

# தளபதி விஜய்யின் முடிவு தமிழ் சினிமாவில் ஒரு சகாப்தத்தின் முடிவு

தமிழ்நாட்டில் தளபதி விஜய்யின் பாக்ஸ் ஆபிஸ் ஆதிக்கம் ஈடு இணையற்றது. தொடர்ச்சியாக நடிகர் விஜய்யின் எட்டுப் படங்கள் உலகளவிய பாக்ஸ் ஆபிஸில் 200 கோடி இந்திய ரூபாவினையும் விஞ்சிய வசூலை பதிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றன.

இது தமிழ் சினிமாவின் மிகவும் பாக்ஸ் ஆபிஸ் கிங் என்ற அவரது அந்தஸ்தை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், ஜனநாயகன் அவரது பிரியாவிடை திரைப்படமாக இருப்பதால், ஒரு சகாப்தத்தின் முடிவை நோக்கி திரைப்படத் துறை தயாராகி வருகிறது.

துரதிர்ஷ்டவசமாக, பொங்கல் விழாவினை முன்னிட்டு ஜனவரி 9ஆம் திகதி வெளியிடப்படவிருந்த இந்தப் படம், சென்சார் சான்றிதழ் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் ஒத்திவைக்கப்பட்டது. தயாரிப்பாளர்கள் இன்னும் புதிய வெளியீட்டுத் திகதியை அறிவிக்கவில்லை.

சிலர் அவரை box office magnet'' என்றும், சிலர் அவரை நம்பகத்தகுந்த இலாபகரமான நட்சத்திரம் என்றும் அழைக்கிறார்கள். பல ஆண்டுகளாக, விஜய் தமிழ்நாட்டின் மறுக்கமுடியாத பாக்ஸ் ஆபிஸ் மன்னராக உருவெடுத்து வருகிறார்.

மேலும் அவரது இறுதி சில படங்களின் வசூல் இந்தக் கூற்றுக்கு சான்றாகும். எச் வினோத் இயக்கிய ஜனவரி 9 ஆம் திகதி வெளியாகவுள்ள ஜனநாயகன் திரைப்படம் அவரது இறுதிப்படமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 33 ஆண்டுகளாக எதிர்பார்ப்பின்றி தங்கள் ஆதரவை அளித்த தனது ரசிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் சேவை செய்வதற்காக திரைப் படங்களை விட்டு விலகுவதாக விஜய் அறிவித்துள்ளார்.

விஜய்யின் தொழில் வளர்ச்சியை அவர் அறிமுகமானதிலிருந்து அவர் நடித்த படங்களின் அடிப்படையில் தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திருப்பூர் சுப்பிரமணியம் வெளிப்படுத்தியுள்ளார்.

தனது தொழில் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில், ரசிகன் மற்றும் கோயம்புத்தூர் மாப்பிள்ளை போன்ற அதிரடி படங்களில் நடித்தார். இந்தப் படங்கள் அவரை தமிழ் சினிமா ரசிகர்களிடம் கொண்டு சேர்த்தது.

எனினும், பூவே உனக்காக தான் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

துள்ளாத மனமும் துள்ளும், காதலுக்கு மரியாதை மற்றும் பல படங்களின் மூலமும் ரசிகர்கள் மனதில் அவர் ஒரு காதல் நாயகனாக மாறினார்.

இந்தப் படங்களில் பெரும்பாலானவை மூத்த தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி நடத்தும் சூப்பர் குட் பிலிம்ஸுக்காகவே எடுக்கப்பட்டன என்றும் திருப்பூர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

1992 ஆம் ஆண்டு நாளைய தீர்ப்பு என்ற திரைப்படத்தில் முன்னணி நடிகராக அறிமுகமானதிலிருந்து 33 ஆண்டுகால நடிப்பு வாழ்க்கையில் 65 படங்களில் நடித்து விஜய் தனது நட்சத்திர அந்தஸ்தை சிகரம் அளவுக்கு கட்டியெழுப்பியுள்ளார்.

1990ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் குஷி (2000) மற்றும் பத்ரி (2001) போன்ற படங்களின் மூலம் காதல் நாயகன் என்ற பிம்பத்தை அவர் நிலைநிறுத்தினார். அவரது திரையுலக வாழ்க்கை ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்தது.

திருப்பாச்சியுடன் விஜய் முழு அளவிலான வணிக நாயகனாக ஆனார். இதனிடையே கில்லி படம் வெளியானதும், அவரது திரையுலக வாழ்க்கை உச்சத்தை எட்டியது.

இந்த நிலையில் சந்தேகத்திற்கு இடமின்றி அவர் தான் பாக்ஸ் ஆபிஸ் கிங் என்று திருப்பூர் சுப்பிரமணியம் கூறினார். கில்லி (2004) ஒரு திருப்புமுனை தருணமாக உள்ளது அந்த படம் 200 நாட்களுக்கு மேல் ஓடியது மற்றும் விஜய்யை சினிமாவில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக நிலை நிறுத்தியது.

அங்கிருந்து அவர் தொடர்ச்சியான வெற்றிகளை வழங்கினார்: போக்கிரி (2007), துப்பாக்கி (2012), கத்தி (2014), மெர்சல் (2017) மற்றும் பிகில் (2019). ஒவ்வொரு படமும் விதிவிலக்காக சிறப்பாக வெற்றி பெற்றது மட்டுமல்லாமல் பாக்ஸ் ஆபிஸிலும் ஆதிக்கம் செலுத்தியது.

அவரது அண்மைய திரைப்படங்களான மாஸ்டர் (2021), பீஸ்ட் (2022), வாரிசு (2023), லியோ (2023) மற்றும் தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம் (2024) அவரது பாக்ஸ் ஆபிஸ் மேலாதிக்கத்தை மேலும் உறுதிப்படுத்தின.

லியோ மட்டும் உலகளவில் ரூ.600 கோடிக்கு மேல் வசூலித்து எல்லா காலத்திலும் அதிக வசூல் செய்த தமிழ் படங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

தமிழ்த் திரையுலகில் அதிக சம்பளம் வாங்கும் நடிகர்களில் தளபதி விஜய்யும் ஒருவர். அவரது சம்பளம் ஒரு படத்திற்கு ரூ.175 கோடி முதல் ரூ.200 கோடி வரை இருக்கும் என்று கூறப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக அவரது சந்தை மதிப்பு அதிகரித்து வருவதால் அவரது சம்பளம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆனால் அவரது மதிப்பு அவரது ஊதியத்திற்கு அப்பாற்பட்டது.

இந்த நிலையில் ஜனநாயகன் திரைப் படத்துடன் விஜய் தனது சினிமா வாழ்க்கையில் இருந்து விடைபெறுவதாக அறிவித்துள்ளமையானது தமிழ்த் திரை உலகிற்கு பெரும் இழப்பாகும். இதனால் தமிழ் சினிமா தனது மிகப்பெரிய நட்சத்திரங்களில் ஒருவரை இழக்க நேரிடும். அவர் தனது தொழில் வாழ்க்கையின் உச்சத்தில் இருக்கிறார்.



குறைந்து வரும் புகழ் அல்லது பாக்ஸ் ஆபிஸ் தோல்விகள் காரணமாக அவர் சினிமாவை விட்டு வெளியேறவில்லை. மாறாக அவர் இன்னும் பிளாக்பஸ்டர்களை வழங்கிக் கொண்டிருக்கும் போது தனது விசுவாசமான ரசிகர்களுக்கும் பொது மக்களுக்கும் சேவை செய்யும் நோக்குடன் முழு நேர அரசியல் பயணத்தை தொடங்கவுள்ளார்.

அனைவரின் மனதிலும் எழும் கேள்வி: விஜய் இல்லாமல் தமிழ் சினிமா நிலைத்து நிற்குமா? இது சினிமாவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அவர் தனது தொழில் வாழ்க்கையின் உச்சத்தில் இருக்கும் போது சினிமாவை விட்டு வெளியேறுகிறார், அவருக்கு வெற்றிகள் இல்லாததால் விலகவில்லை.

அவரது முடிவு கடினமாக இருந்தாலும், அந்த முடிவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது நம் கைகளில் இல்லை என்று திருப்பூர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

கடந்த 10 முதல் 15 ஆண்டுகளில் தமிழ் சினிமாவுக்கு அவர் செய்ததெல்லாம் ஈடு இணையற்றது.

அவர் இல்லாதது அந்த இடத்தை நிரப்ப முடியாத மிகப் பெரிய வெற்றிடமாக அமையும் என்றும் கூறினார். எனவே விஜய்யின் மறைவு தமிழ் சினிமாவில் ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.

ஜனநாயகன் விஜய்யின் நடிப்பு வாழ்க்கையின் முடிவு மட்டுமல்ல இது தமிழ் சினிமாவின் மிகவும் வெற்றிகரமான பாக்ஸ் ஆபிஸ் சரித்திரங்களில் ஒன்றின் இறுதி அத்தியாயமாகும்.

அவர் இல்லாமல் தமிழ் சினிமா நிலைத்து நிற்குமா என்பது கேள்வி அல்ல.

ஆனால் தளபதி விஜய் தமிழ் திரை உலகிற்கு அளித்த பங்களிப்பில் ஒரு பகுதியையாவது பிரதிபலிக்க கூடிய ஒருவரைக் கண்டு பிடிக்க எவ்வளவு காலம் ஆகும் என்பது தான் கேள்வி ஆகவுள்ளது.

# ஈரான் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தலாம் - வெள்ளைமாளிகை

ஈரான் நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ள பணவீக்கம், அதன் தொடர்ச்சியாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடங்கிய மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 16-வது நாளாக இன்றும் நீடித்து வருகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்




இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 544 பேர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10,681 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்நிலையில், ஈரான் பற்றிய கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட், ஈரான் விவகாரத்தில் அனைத்து விசயங்களும் டிரம்பின் மேஜை மீது ஆவணங்களாக வைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் ஈரான் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்துவதும் ஒன்று என்றார். எனினும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதே எப்போதும், டிரம்பின் முதல் தேர்வாக இருக்கும் என கூறினார். அவர் நேற்றே உங்கள் எல்லோரிடமும் கூறினார். நீங்கள் ஈரான் அரசின் செயல்பாடுகள் பற்றி வெளிப்படையாக கேள்விப்பட்டு வரும் விசயத்தில் இருந்து, அமெரிக்க அரசுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்து வரும் விசயங்கள் முற்றிலும் வேறானவை. அவற்றை வெளியிட டிரம்ப் ஆர்வத்துடன் இருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன் என்றார். எனினும், தேவைப்பட்டால் இராணுவ நடவடிக்கையை மேற் கொள்ள டிரம்ப் பயப்படமாட்டார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ஈரான் இஸ்லாமிய குடியரசு போரை நாடவில்லை, ஆனால் போருக்கு முழுமையாக தயாராக உள்ளது' என்று வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெஹ்ரானில் அரசு தொலைக்காட்சி ஒளிபரப்பிய வெளிநாட்டு தூதர்கள் மாநாட்டில் கூறினார். நாங்கள் பேச்சுவார்த்தைகளுக்கும் தயாராக இருக்கிறோம், ஆனால் இந்த பேச்சுவார்த்தைகள் நியாயமானதாகவும், சம உரிமைகளுடனும், பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலும் வேண்டும்.

# அனர்த்த நிவாரண உதவிகளும் புவிசார் அரசியல் நலன்களும்!

இயற்கை அனர்த்தத்தின் விளைவான அழிபாடுகளில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் இடர்மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் இலங்கை மக்கள் புதிய வருடத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத படுமோசமான 2022 பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டு வந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுவந்த ஒப்பீட்டு அளவிலான முன்னேற்றத்தை 'டித்வா' சூறாவளி மறுதலையாக்கியிருக்கிறது.

மக்களின் மாபெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் பதவிக் காலத்தின் முதல் வருடத்தைக் கடந்து வந்திருக்கும் நிலையில், இயற்கை அனர்த்தத்தின் விளைவாக சமாளிக்க முடியாத கடமைப் பொறுப்புக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் சுசூறாவளியின் பாதிப்புக்களை முன் கூட்டியே தணிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதையும் அனர்த்தத்துக்கு பின்னரான நிவாரண உதவிப் பணிகளிலும் புனரமைப்பு நடவடிக்கைகளிலும் காணப்படும் குறைபாடுகளையும் கண்டனம் செய்து கொண்டிருக்கும் எதிரணிக் கட்சிகள், தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கு ஆட்சி முறையில் அனுபவமும் தகுதியும் இல்லை என்று ஏற்கெனவே முன் வைத்து வந்த விமர்சனத்தை மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றன.

பரந்தளவிலான கலந்தாலோசனையின் அடிப்படையிலான தீர்வுகளை வேண்டி நிற்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளாக இருந்தாலென்ன, இயற்கையின் சீற்றம் ஏற்படுத்தும் பேரழிவாக இருந்தாலென்ன தேசிய அனர்த்தங்களின் போது சகல தரப்புகளையும் அரவணைக்கும் அணுகுமுறை மூலமாக நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் அரசியல் சக்திகள் செயற்பட முன்வராத சாபக்கேடான கலாசாரம் ஒன்று இலங்கையில் ஆழமாக வேரூன்றி விட்டது.

2024 ஆகஸ்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட வேளையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை குறித்து எதிரணி அரசியல்வாதிகள் அக்கறை காட்டிய போதிலும், அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நம்பகத்தன்மை கொண்ட காரணங்களை அவர்களினால் முன் வைக்க முடியவில்லை. அதே போன்றே சூறாவளியின் விளைவான நெருக்கடியையும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை திருப்புவதற்கு பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாக நம்பியதில் அவர்கள் மீண்டும் தவறிழைத்து விட்டனர்.

அதேவேளை சகல தரப்புகளையும் ஈடுபடுத்தி அழிபாடுகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான பணிகளை முன்னெடுப்பதில் அரசாங்கமும் அக்கறை காட்டவில்லை. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி, அரசாங்கத்தின் அணுகுமுறையில் உள்ள பாரதூரமான குறைபாட்டை



தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

அந்த செயலணியில் அரசாங்கத் தரப்பைச் சாராத சகல உறுப்பினர்களுமே அனர்த்த முகாமைத்துவத்தில் அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கையாளுவதில் அனுபவத்தை அல்லது நிபுணத்துவத்தை கொண்டவர்கள் என்று அறியப்படவில்லை என்ற விமர்சனம் சிவில் சமூக அமைப்புகளிடம் இருந்து வந்திருக்கிறது.

ஒரு இடதுசாரிக் கூட்டணியாக இருக்கின்ற போதிலும் கூட, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களுடன் ஊடாட்டங்களைச் செய்வதில் மிகுந்த எச்சரிக்கையுடனேயே நடந்துகொள்கிறது. பல்வேறு விமர்சனங்களுக்கு பின்னர் தான் ஜனாதிபதி செயலணியில் குறைந்த பட்சம் சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியையாவது சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதாக தெரியவருகிறது.

கொள்கைகளை வகுக்கும் செயன்முறைகளில் பரந்தளவிலான தரப்புகளின் பங்கேற்பை குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்களை திட்டமிட்ட முறையில் புறக்கணித்த கடந்த கால அணுகுமுறைகளின் விளைவாக நாடு அனுபவித்த அவலங்களில் இருந்து தேசிய மக்கள் சக்தி எந்த பாடத்தையும் கற்றுக் கொள்ள முயற்சிக்கவில்லை.

ஆனால், சர்வதேச சமூகத்தைக் கையாளுவதில் முன்னைய அரசாங்கங்கள் கடைப் பிடித்த அணுகுமுறைகளின் விளைவாக தோன்றியதைப் போன்ற நெருக்கடிகள் தங்களுக்கு வராமல் இருப்பதை உறுதி செய்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகுந்த விவேகத்துடன் செயற்பட்டு வருகிறது.


அமெரிக்கா மற்றும் மேற்குலக வல்லாதிக்க நாடுகளுடனும் ஆசியாவின் பெரிய நாடுகளுடனுமான உறவுகளில் ஒரு சமநிலையை அவர்கள் பேணுகிறார்கள். இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் சூறாவளியின் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளும் மேற்குலக நாடுகளிடமிருந்து இருந்து கிடைத்த எதிர்பார்த்திராத வகையிலான பேரளவு உதவிகளும் இதற்கு சான்று. குறிப்பாக, இந்தியாவுடனும் சீனாவுடனும் உறவுகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் சாதுரியமாகக் கையாளுகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே.வி.பி.) நீண்டகாலமாக இருந்து வரும் நெருக்கமான அரசியல் தொடர்புகளையும் அதன் கடந்த கால இந்திய விரோத நிலைப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அதன் தலைமையிலான ஆட்சியில் புதுடில்லிக்கு எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பெய்ஜிங்குடனான உறவுகள் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சகல எதிர்பார்ப்புக்களையும் பொய்யாக்கி ஜனாதிபதி திசநாயக்கவின் அரசாங்கம் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணுகிறது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிய உறவுகளை அன்றைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 'மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மகோன்னதமானவை என்று வர்ணித்தார். ஆனால் இன்று திசநாயக்கவின் ஆட்சியில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு வர்ணிப்பது என்றே தெரியவில்லை.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கும் வல்லாதிக்க நாடுகள் முண்டியடித்துக் கொண்டு ஓடி வந்ததை இந்து சமுத்திரத்தில் புவிசார் நலன்களின் மறைமுகமான 'காட்சிப்படுத்தல்' என்று கூறமுடியும். அனர்த்த நிவாரண உதவிகளை வழங்குவது ஒரு நல்லெண்ணச் செயற்பாடு மாத்திரமல்ல, இராஜதந்திர நகர்வுமாகும். நிவாரண உதவிகளை வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்பை வல்லாதிக்க நாடுகள் கொழும்புடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இலங்கையில் அனர்த்தங்கள் நிகழ்கின்ற வேளைகளில் எல்லாம் முதலில் உதவிக்கு விரைகின்ற நாடான இந்தியா இந்த தடவை கடற்படையின் விமானந்தாங்கி கப்பல்கள் சகிதம் அதிவிசேடமான அக்கறையை வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது. வெளியுறவு அமைச்சர் எஸ்.

கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- வீதனபாலசிங்கம் -



ஜெய்சங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக கொழும்புக்கு வந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவித்திட்டத்தை அறிவித்தார்.

அவர் ஊடாக மோடி ஜனாதிபதி திசநாயக்கவுக்கு கொடுத்தனுப்பிய கடிதத்தில் 'இலங்கையின் பக்கத்தில் இந்தியா எப்போதும் நிற்கும்' என்று குறிப்பிட்டிருந்தார். ஜெய்சங்கரின் விஜயத்தின்போது அறிக்கை ஒன்றை வெளியிட்ட திசநாயக்க 'இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் இது ஒரு புதிய யுகம்' என்று வர்ணித்திருந்தார்.


ஜெய்சங்கர் புதுடில்லி திரும்பிய உடனடியாக சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது மத்திய குழுவின் உறுப்பினர் வாங் ஜுன்ஷெங் தலைமையிலான உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று இலங்கை அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஒட்டு மொத்தமாக நோக்கும் போது கேந்திரமுக்கியத்துவ போட்டிக்குரிய ஒரு பிராந்தியத்தில் தங்களது செல்வாக்கை மீளஉறுதிப்படுத்திக் கொள்வதற்கு இந்த சந்தர்ப்பத்தை வல்லாதிக்க நாடுகள் பயன்படுத்திக் கொண்டன.

இலங்கையை போன்று காலநிலை மாற்றத்தின் விளைவான இயற்கை அனர்த்தங்களினால் அடிக்கடி பாதிக்கப்படும் ஆபத்தைக் கொண்ட நாடுகள், சகல நாடுகளுடனும் நல்லுறவைப் பேணவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் போக்கு அதிகரிக்கும் போது வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் போட்டா போட்டியின் மைதானமாக மாறுகின்ற ஆபத்தும் அதிகரிக்கிறது. உதவிகளைப் பெறுகின்ற அதேவேளை, முக்கியமான நாடுகளுடனான உறவுகளில் சமநிலை ஒன்றைப் பேணுவது என்பது மிகவும் சிக்கலான ஒரு காரியமாகும்.


ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச சமூகத்தை நம்பியிருக்கும் இலங்கை, இயற்கையின் சீற்றத்தின் அழிபாடுகளில் இருந்து மீட்சி பெறுவதற்கும் வெளிநாட்டு உதவிகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருப்பதால் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களுக்குள் சிக்கிக் கொள்வதை தவிர்க்க முடியாமல் போகலாம். இது காலவரை அந்த நாடுகளுடனான உறவுகளில் பேணிவந்த சமநிலையை தொடர்ந்தும் பேணுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் இயலுமாக இருக்குமா என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இதனிடையே, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வருவதில் அரசாங்கத்தினால் போதியளவுக்கு கவனம் செலுத்துவதற்கு அவகாசம் கிடைக்குமா?


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும். யோசனைகளை அலுவலகத்திலும் குடும்பத்திலும் மதிப்பார்கள். குடும்பத்தில் உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில் செய்பவர்கள் உங்கள் வியாபாராத்தை பெருக்கும் காலமிது.





ரிஷபராசி அன்பர்களே! எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவும், பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். தங்கள் உடல் நிலை சிறப்பான முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவிக் கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. . தொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யும் போது மனைவியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.





மிதுனராசி அன்பர்களே! மிகுந்த பொருட்செலவில் சுபவிரயங்கள், எடுத்த காரியங்களில் தடை, எதுவுமே நேர்மாறாக இருப்பது என கடந்த காலங்களை மிகுந்த சிரமத்துடன் கழித்தீர்களல்லவா. இனி வரும் காலம் மிகவும் நல்லகாலம். உங்கள் பேச்சை நீங்களே கேட்காமல் இருந்து வந்த நிலைமை மாறும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து பேசுவது நல்லது. துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்





கடகராசி அன்பர்களே! தடங்கல்கள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நல்ல நல்ல விஷயங்கள், விஷேசங்கள் நடக்கும். உங்கள் தைரியத்திற்கு இறைவனை வேண்டுங்கள். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டும். முன்னோர்களை அமாவாசை தோறும் வழிபடவும். தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகள் செய்யும் போது கவனம் தேவை. அனுபவமிக்கவர்களுடன் கலந்து ஆலோசித்து முதலீடு செய்வது நலம்.





சிம்மராசி அன்பர்களே! தீவிர முயற்சியால் தடைபட்டிருந்த திருமணம், கல்வி, என தடையாக இருந்த அனைத்து காரியங்களும் தடைகள் விலகி ஒன்றன் பின் ஒன்றாக சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் நடை பெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.




கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளை இரு மடங்காக்குங்கள், வெற்றிகள் உங்களைத் தேடி வரும் காலமிது. உங்கள் பொன்னான நேரத்தை அடுத்தவருக்காக வீணாக்காதீர்கள். அடுத்தவரை பற்றி பேசா விட்டாலும் நீங்கள் கூறியதாக சிலர் பற்ற வைக்க கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! நல்ல விஷயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விஷயங்களில் அவசரம் வேண்டாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். தொழிலில் லாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்ய தகுதியானவர்களின் ஆலோசனைகளை பெற்று செய்யவும். உத்யோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை.





விருச்சிகராசி அன்பர்களே! கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையும். உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகள் செய்ய தயங்க வேண்டாம். தாய் தந்தையரை வணங்கி எந்த காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே.








தனுசுராசி அன்பர்களே! வீடு, மனை வாங்க தடை, சுபகாரியம் செய்வதற்கு தடை, நற்செயல்கள் எது செய்வதற்கும் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! தைரியமாக எதையும் எதிர் கொள்வீர்கள். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடு களில் யாரையும் நம்பவேண்டாம். நல்ல நண்பர்களால் ஆதாயம் நல்ல மதிப்பு கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர் பார்த்திருந்த தனலாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் செய்பவர்கள் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வது அவசியம்




மீனராசி அன்பர்களே! வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். இயந்திரங்கள், நீர்நிலைகளில் கவனம் தேவை. சோம்பல் கூடவே கூடாது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நண்பர்கள் உதவிகள் செய்வர். லாபகரமான முதலீடுகள் செய்வீர்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வெனிசுலா:- 21ம் நூற்றாண்டின் சோஷலிச விளைநிலம்!

(18ம் பக்கத் தொடர்ச்சி) அவ்வளவு இலகுவாக இருக்கப்போவதில்லை. அமெரிக்காவோடு கைகோர்த்துள்ள மேற்கு, மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சமூக ஜனநாயகக்கட்சிடமும், பசுமைக்கட்சியிடமும் மக்கள் அரசியல் அதிகாரத்தை வழங்கி வருகின்றனர்.

இது கூட 21 ம் நூற்றாண்டின் சோஷலிச வளர்ச்சி வேகத்தை குறைப்பதற்கான ஒரு முதலாளித்துவ சார்பு மாற்று மாதிரிதான். எனினும் 21ம் நூற்றாண்டின் சோஷலிசம் இந்த மிதவாதத்தை பயன்படுத்தி கொள்ள முடியும். அடுத்த கட்டத்தில் இது தீவிர இடதுசாரி போக்காக மாறமுடியும் சில ஐரோப்பிய நாடுளில் சமூக ஜனநாயக கட்சிகளுக்குள்ளே இந்த முரண்பாடு ஆரம்பித்தும் விட்டது.

சோஷலிச கருத்தியல்களை திருடி இந்த கட்சிகள் தங்களை இடதுசாரிகளாக காட்டி அரசியல் செய்கின்றன. அமெரிக்க ஜனநாயகக்கட்சியையே கம்யூனிஸ்ட்டுக்கள் என்று கூறும் டோனால்ட் ரம்ப்புக்கு ஐரோப்பிய சமூக ஜனநாயக, பசுமை அரசியல் வளர்ச்சி நிச்சயம் ஒரு அலர்ஜி தான். ஆனால் முதல் எதிரி அல்ல.

தனது 24 வயதில் கியூபாவின் அரசியல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற பின்னர் கியூபா கம்யூனிஸ்ட் கட்சியில் பிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் பொலிட் பீரோவின் உறுப்பினராக செயற்பட்டவர் மதுரோ. வெனிசுவேலா திரும்பிய பின்னர் அவர் வெளியுறவு அமைச்சராக இருந்தார். அப்போது இருந்து அமெரிக்க கழுகுப்பார்வை சாவேர்ஸையும், மதுரோவையும் குறிவைக்கத் தொடங்கியது. மதுரோ என்னசெய்தார்? ஏன் கடத்தப்பட்டார்?

1. வெளியுறவு அமைச்சராக இருந்த காலத்தில் அமெரிக்காவுக்கு போட்டியாக இருந்த பாடுகளுடன் வெனிசுவேலா வெளியுறவுக்கொள்கையை விரிவுபடுத்தினார்.

2.சீன - தைவான் விவகாரத்தில் சீனச்சார்பு நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

3. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சவாலாக இருந்த லிபியத்தலைவர் கடாபியை ஆதரித்தார்.

4. 2008-2009 காசா போரின்போது இஸ்ரேல் உடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டார்.

5. பாலஸ்தீன அரசுடன் இராஜதந்திர உறவுகளை பேணினார்.

6. சிரியாவில் அசாத் நிர்வாகத்திற்கு ஆதரவளித்தார்.

இந்த அமெரிக்க எதிர்ப்பு வரலாற்றுப் பின்னணியில் சார்வேர்ஸ்க்கு பின்னர் வெனிசுவேலா தலைவரான மதுரோ 21ம் நூற்றாண்டின் சோஷலிசம் நோக்கிய பயணத்தில் செயற்பட்டார். செப்டம்பர் 2008இல் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பேசிய சாவேர்ஸ் அமெரிக்க ஜனாதிபதியை பார்த்து நீ ஒரு பிசாசு என அழைத்தார். இந்த இடத்தில் தான் அமெரிக்க தலைமைகளை வெனிசுவேலா வைத்திருந்தது. இதற்கு மதுரோவும் விலக்கல்ல.

7. மதுரோ ரஷ்ய -உக்ரைன் விரிசலில் இராஜதந்திர ரீதியான சமாதான தீர்வை வலியுறுத்தினார்.

8. BRICS அமைப்பின் ஊடாக சீன முதலீடுகளை பெற்று வெனிசுவேலா பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு தேடினார். அமெரிக்க டொலருக்கு எதிராக ஒரு BRICS நாணயத்தின் ஊடான கொடுக்கல் வாங்கலை இலக்காக கொண்டு செயற்பட்டார்.

9. சமகால இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் மேற்கொண்ட போரை இனவழிப்பு என்று உரத்துப் பேசியதுடன், இஸ்ரேலின் ஈரான் மீதான தாக்குதல்களையும் கண்டித்தார். இதற்கு பின்னால் டொனால்ட் ரம்ப்பின் அரசியலை, இஸ்ரேலுக்கான ஒரு தலைப்பட்ச சார்புத்தன்மையை கண்டித்தார்..

இது விடயமாக மதுரோ நினைவூட்டிய இந்த கூற்று முக்கியமானது. JESUS CHRIST WAS A YOUNG PALESTINIAN UNJUSTLY CRUCIFIED BY SPANISCH EMPIRE

10. உலகில் அதிக எண்ணெய்வள இருப்பைக் கொண்ட வெனிசுவேலாவை அமெரிக்காவுக்கும், அமெரிக்க கம்பனிகளுக்கும் விட்டுக்கொடுக்க அவர் தயாராக இருக்கவில்லை.

இந்த பட்டியல் மதுரோவின் அரசியல் பாதையை எமக்கு காட்டும். அமெரிக்காவினதும், அதன் கூட்டாளிகளினதும் பொருளாதாரத் தடைகளால் வெனிசுவேலா மக்கள் பெரிதும் பாதிப்புக்களை சந்தித்தனர்.

21ம் நூற்றாண்டின் சோஷலிசம் பேசுகின்ற முதலாளித்துவத்திற்கு எதிரான மாற்றுத்திட்டத் தேடலில் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சி ஊடாக இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் பங்கிடுதல் என்பது முக்கியமானது. இதனூடாக ஜனநாயகத்தையும், சமூக நீதியையும் பாதுகாக்க முயற்சிக்கப்படுகிறது. ஆனால்

19ம், 20ம் நூற்றாண்டுகளில் காலனித்துவத்தின் ஊடாகவும், முதலாளித்துவத்தின் ஊடாகவும் ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்புகளுடன், காலனித்துவமும், அதைத்தொடர்ந்து முதலாளித்துவம், உலகமயமாக்கம், தாராளவர்த்தகம் என்பன வறிய நாடுகளில் ஏற்படுத்தியுள்ள நுகர்வு பழக்க கலாச்சார சமூகக்கட்டமைப்பில் இருந்து மக்களை விடுவிப்பது வெனிசுவேலாவுக்கு மட்டும் அல்ல உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

இந்த சமூக, பொருளாதார, அரசியல் பலவீனத்தை மேற்குலகம் சார்பான நாடுகளை அணைத்தும் மறுத்தால் அடித்தும் தனது ஏகாதிபத்திய இலக்கை நிறைவேற்றிக்கொள்கிறது அமெரிக்கா. இதற்கு இன்றைய பலியெடுப்பு வெனிசுவேலா. இதன் அர்த்தம் ஏகாதிபத்திய அரவணைப்புக்குள் உள்ள நாடுகள் தப்பி விட்டன என்பதல்ல. அவையும் சிக்கியே உள்ளன.

தென்னமெரிக்க கரீபிக் பிராந்தியத்தில் சி.ஐ.ஏ. யின் அத்துமீறல்களுக்கு நீண்ட பட்டியல் உண்டு. 1954 இல் குவாட்டமாலா. 1964 இல் பிரேசில். 1973இல் சிலி. 1989 இல் பனாமா. 2026 இல் வெனிசுவேலா! இனி?

# பாதுகாப்பு அமைச்சின் தடைப்பட்டியலில் 16 அமைப்புக்கள் 206 தனிநபர்கள் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பாம்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உள்ளடங்கலாக தடைசெய்யப்பட்ட 16 அமைப்புக்கள் மற்றும் 206 தனிநபர்களின் பெயர் விபரங்களைக் குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யகொந்தாவினால் புதுப்பிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயற்பாடுகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புகளைப் பேணி வரும் மற்றும் அவற்றைத் தூண்டும் வகையில் இயங்கி வரும் அமைப்புக்களைத் தடை செய்து இலங்கை அரசாங்கங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு வருகின்றன. அவ்வாறு தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களின் பெயர்கள் தொடர்ந்து உள்ளடக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி அரசாங்கத்தினால் கடந்த 6 ஆம் திகதி வெளியிடப்பட்டிருக்கும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தலில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் நிவாரண நிதியம், தலைமையகக் குழு, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளைஞர் அமைப்பு மற்றும் சேவ் த பேர்ள்ஸ் ஆகிய தமிழ் இயக்கங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பெயர்களும் தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மிலாதே இப்ராஹிம், விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சுப்பர் முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய அமைப்புக்களின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளன.

அதேபோன்று ஜேசுராசா அமலதாஸ், விஸ்வநாதன் ருத்ரகுமரன், அப்பாத்துரை செந்தில் விநாயகம், சந்திரா வரதகுமார், வீரசிங்கம் நாகேஸ்வரன், நடராஜா சத்தியசீலன், அமிர்தலிங்கம் திலீபன், விநாயகமூர்த்தி மோகனசுந்தரம், மொஹமது இப்திகார் மொஹமது இன்சாப், அப்துல் காதர் மொஹமட் ஷாஸ்னி, மொஹமது பாருக் முஹம்மது ஹிலாம், முகமது இப்ராகிம் சாதிக் அப்துல்லா, மொஹம்மது சரிபு ஆதம் லெப்பே, அப்துல் லதீப் மொஹமட் சாபி ஆகியோர் உள்ளடங்கலாக 206 தனிநபர்களின் பெயர்களும் அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்வாங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் தடைப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதன் மூலம் இவ்வமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சார்ந்த செயற்பாடுகள், நிதியங்கள் மற்றும் சொத்துக்கள் என்பன நாட்டுக்குள் முடக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


# இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள்:- ஐ.நா.வின் புதிய அறிக்கை வெளியிட்ட அதிர்ச்சி உண்மைகள்

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகியும், போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட பாலியல் வன்முறைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் (OHCHR) தனது புதிய அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது. ஜனவரி 13, 2026 (செவ்வாய்க்கிழமை) அன்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையானது, இலங்கை அரச படைகளால் தமிழர்களுக்கு எதிராகப் பாலியல் வன்முறை ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டதை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது.

நாங்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டோம் நீதிக்கான நம்பிக்கையையும் சேர்த்து என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாகச் சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. போரின் போதும், போருக்குப் பிந்தைய காலத்திலும் இலங்கை பாதுகாப்புப் படையினரால் மேற் கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல் மாறாக அவை தமிழ்ச் சமூகத்தை அச்சுறுத்தவும், சிதறடிக்கவும், அவமானப்படுத்தவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு மூலோபாய நடவடிக்கை என்று அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

வழக்கமாகப் போர்க்கால பாலியல் வன்முறைகள் என்றாலே பெண்கள் மீதான வன்முறையாகவே பார்க்கப்படும் நிலையில், இந்த அறிக்கை தமிழ் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான கொடூரமான பாலியல் சித்திரவதைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. தடுப்புக்காவலில்




வைக்கப்பட்டிருந்த தமிழ் ஆண்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய வன்முறைகள், அவர்களை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் முடக்கும் நோக்கம் கொண்டவை என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட ஒருவர் ஐ.நா. அதிகாரிகளிடம் கூறுகையில், "பாலியல் வன்முறை என்பது ஒரு போதும் நிற்காத ஒரு சித்திரவதை என்று தனது வேதனையைப் பதிவு செய்துள்ளார்.

இலங்கையில் நிலவும் தண்டனையில் இருந்து விலக்கு என்ற கலாச்சாரமே இத்தகைய குற்றங்கள் தொடர்வதற்குக் காரணம் என்று ஐ.நா. கடுமையாகச் சாடியுள்ளது. போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் சட்டத்தின் பிடியில் இருந்து தொடர்ந்து தப்பித்து வருவதாகவும், இது பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் வலியைத் தருவதாகவும் அறிக்கை கூறுகிறது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள், உண்மையை கண்டறியவோ அல்லது குற்றவாளிகளைத் தண்டிக்கவோ தவறி விட்டன. மாறாக, சாட்சியங்களை அழிப்பதிலும், பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்துவதிலும் குறியாக இருந்துள்ளன.

இந்த அறிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசு உடனடியாக பாதிக்கப்பட்டவர்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம், இலங்கை அரசு பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது:

அரச படைகளால் இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைகளைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு மன்னிப்பு கோருதல். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் மருத்துவ, உளவியல் உதவிகளை வழங்குதல்.

சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய சுதந்திரமான விசாரணைப் பொறிமுறையை உருவாக்குதல்.

இந்த அறிக்கை புலம்பெயர் தமிழ் மக்களிடையே மீண்டும் ஒருமுறை வலியையும், அதே சமயம் நீதிக்கானத் தேடலையும் அதிகப்படுத்தியுள்ளது. தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் வெறும் கடந்தகால வரலாறு அல்ல, அது இன்றும் தொடரும் ஒரு வலி என்பதை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் வசிக்கும் 25 வயது இளம் கணினி பொறியாளர் தனது முன்னாள் காதலனின் நிர்வாண புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர், தனது நிர்வாண புகைப்படங்கள் வட்ஸ்அப் குழுவில் பகிரப்பட்டதாகவும், அது அவரது முன்னாள் காதலியால் செய்யப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய, வடக்கு மாகாண குற்ற புலனாய்வு பிரிவு விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், முன்னாள் காதலியின் செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் அவர் முறைப்பாட்டாளருடன் சுமார் 15 ஆண்டுகளாக காதல் உறவில் இருந்ததாக தெரியவந்துள்ளது.

தனது காதலனை பிரிந்ததால் அவர் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும், வேதனையடைந்ததாகவும் அதனால் பழிவாங்கும் நோக்கில் பகிர்ந்ததாக தெரிவித்துள்ளார்.


Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரா:- நம்பிக்கையா? பழைய ஏமாற்றங்களின் மறு பதிப்பா?

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் 15 ஜனவரி 2026 யாழ்ப்பாணம் சென்றார். பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார். வழமை போன்று மக்கள் திரளாகக் கூடினர். புகைப்படங்கள் எடுத்தனர். ஜனாதிபதி மக்களை வாரி அணைத்துக் கொண்டார். அந்தக் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவின.



ஆனால் இந்தக் காட்சிகளுக்குப் பின்னால் எழும் அடிப்படை அரசியல் கேள்வி ஒன்று தவிர்க்க முடியாததாக உள்ளது. தமிழ் மக்கள் இன்னமும் சிங்களத் தலைவர்களை நம்புகின்றார்களா? அல்லது சிங்கள அரசியல் இன்னுமொரு முறை அவர்களை ஏமாற்றத் தயாராக உள்ளதா?

இலங்கை அரசியலில், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும், அணைப்பு அரசியல் புதிதல்ல. இதற்கு முன்பும் ஜனாதிபதிகளும் பிரதமர்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். குழந்தைகளை முத்தமிட்டுள்ளனர். பெண்களுடன் புகைப்படம் எடுத்துள்ளனர். மக்களுடன் கை குலுக்கியுள்ளனர். ஆனால் அந்த அணைப்புகள் காணி விடுவிப்பாக மாறியதா? இராணுவ முகாம்கள் அகற்றலாக மாறியதா? நீதி கிடைத்ததா? தமிழ் மக்களின்



அனுபவம் பெரும்பாலும் இல்லை என்றே பதிலளிக்கிறது.

முந்தைய சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிட்டால், அநுர குமார திசாநாயக்க ஒரு முற்போக்கான அரசியல்வாதி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அவர் இனவாதப் பேச்சுகளைக் குறைவாகவே பேசுகிறார். அல்லது இல்லை என்றும் சொல்லலாம். ஊழலுக்கு எதிரான மொழி அவரிடம் உள்ளது. சாதாரண மக்கள் பேசும் மொழியில் அவர் மக்களுடன் அரசியல் மொழியில் உரையாடுகிறார்.

ஆனால் தமிழ் அரசியல் நினைவுகள் மொழியை விட நடவடிக்கைகளையே அளவுகோலாகக் கொள்கின் றன.

யாழ்ப்பாணப் பயணத்தின் போது, தமிழ் மக்களுக்கு நேரடியாகப் பிணைந்துள்ள முக்கியமான கேள்விகள் எதுவும் வெளிப்படையாக பேசப்படவில்லை.

தையிட்டி பௌத்த விகாரை. சட்டவிரோதமாக எழுப்பப்பட்ட ஒரு மத அரசியல் சின்னம்.

காணி விடுவிப்பு இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பிடியில் உள்ள தனியார் நிலங்கள்

செம்மணி புதைகுழி இன்னும் நீதியின்றி உறங்கும் மனித உரிமை.

சிறையில் வாழும் தமிழ்இளைஞர்களது விடுதலை

காணாமல் போனோருக்கான நீதி தேடல்

இந்த விடயங்கள்தமிழ் சமூகத்தின் ஆறாத ஆழ்ந்த காயங்கள். அவற்றைப் பற்றி ஜனாதிபதி மௌனம் காத்தது, நேரம் இல்லை என்பதற்காகவா? அல்லது இப்போது பேச அரசியல் வசதி இல்லை என்பதற்காகவா?

சிலர் கூறலாம் தைப்பொங்கல் நாள். அரசியல் பேசாமல் தவிர்த்திருக்கலாம் என்று. ஆனால் தமிழ் மக்களுக்கு தைப்பொங்கல் என்பது நம்பிக்கையின் நாள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது அந்த நாளிலேயே நம்பிக்கைக்கான ஒன்று. அன்றைய நாளில் ஒரு அரசியல் சொல்லாவது வெளிவர வேண்டாமா?

யாழ்ப்பாணத்தில் மக்கள் கூடுவது, தலைவர்களை நம்புவதற்காக மட்டுமல்ல. அது சில நேரங்களில் இயலாமையின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.

அரசு அதிகாரம் யாரிடமிருக்கிறதோ, அவரைப் பார்க்க வேண்டும் என்ற மனநிலை. ஒரு மாற்றம் வருமா? என்ற மெலிந்த எதிர்பார்ப்பு.

இது முழுமையான அரசியல் நம்பிக்கை அல்ல. அது நீண்ட கால தோல்விகளுக்குப் பிறகும் உயிர் வாழும் ஒரு சமூகத்தின் மனநிலை.

அநுராவின் யாழ்ப்பாணப் பயணம் இன்னொரு உண்மையையும் வெளிச்சம் போடுகிறது. தமிழர் பகுதிகளில் அநுராவின் அரசியல் வளர்ச்சியை தமிழ் தலைவர்கள் போதுமான அளவு கவனிக்கவில்லை. கண்டு கொள்ளவுமில்லை.



அநுரவை மற்றொரு சிங்களத் தலைவர் என ஒதுக்கி விடுவது, அரசியல் ரீதியாக தவறு. அவரது ஆளுமை. மக்களோடு மக்கள் மொழியில் கவர்ச்சிகரமாகப் பேசுவது. தென்னிலங்கையில் கூட அவருக்குப் போட்டியான தலைவர்கள் இன்று இல்லை. முழு நாட்டையுமே வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளிய மகிந்தா குடும்பத்து வாரிசு நாமல். துணிந்து ஒரு முடிவு எடுக்க முதுகெலும்பு இல்லாத சஜித் பிரேமதாசா போன்றவர்களால் அநுராவை இன்றளவும் வெற்றி கொள்ள முடியாது என்பதே யதார்த்தமாகும்.

அதேவேளை தமிழ்மக்கள் அவரிடம் நிபந்தனை இல்லா ஆதரவு காட்டுவதும் ஆபத்தானது. தமிழ் அரசியல் தலைமைகள் அணைப்புகளை அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளாமல் சாதாரணமாக கடந்து விடாமல்,தெளிவான கேள்விகளை நேரடியாக முன்வைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அணைத்த காட்சிகள் உணர்ச்சிப்பூர்வமானவை. ஆனால் தமிழ் அரசியல் வரலாறு எச்சரிக்கிறது: உணர்ச்சிகள் தீர்வல்ல.

அநுர உண்மையிலேயே மாற்றத்தின் தலைவராக இருக்க விரும்பினால், அவர் அணைப்புகளை மட்டுமல்ல, காணிகளை, நீதியை உண்மையை தமிழ் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் முன்னைய சிங்களத் தலைவர்கள் போன்று தான் அநுராவும் ஒருவர் என்ற வரலாற்றில் இருந்து விடுபடுவார்.

அதுவரை யாழ்ப்பாணத்தின் கூட்டங்கள் நம்பிக்கையின் அடையாளமாக அல்ல, காத்திருப்பின் சாட்சியாகவே அவர் படிக்க வேண்டும்.


இனிய தைப் பொங்கல்
வாழ்த்துக்கள்!
Wishing you joy
and prosperity this
Thai Pongal!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
@shaunchenmp
@Shaun_Chen
www.shaunchen.com